மலர்-4 இதழ்-96 ஆகஸ்ட் 16-31 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

## மனக்கஷ்டம் பணக்கஷ்டம் போக்கும் வெற்றிலை தீர்த்தம்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

e- book



# வேலை தலைகீழாக பிடித்த வேலவன்

# கோகுலாஷ்டமி கிருஷ்ண ஜெயந்தி

ஆவணி மாதம் வரக்கூடிய தேய்பிறை அஷ்டமி இரவு தங்கி இருந்தால் அது கோகுலாஷ்டமி என்று அழைக்கப்படுகிறது. இன்னொன்று அதே தேய்பிறை அஷ்டமியும் ரோகிணி நட்சத்திரமும் ரிஷப லக்னமும் சேர்ந்து வருவது ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி ஆகும்.

சிவன் சம்பந்தமான வழிபாட்டை பிரதானமாக கொண்டவர்கள் கோகுலாஷ்டமி என்றும் பெருமாளை அடிப் படை யாகக் கொண்டு வாழ்பவர்கள் கிருஷ்ண ஜெயந்தி என்றும் கிருஷ்ண ருடைய பிறந்த நாளை கொண் டாடுவார்கள்.





# சித்தி புத்தி விநாயகர்

தென்னிந்தியாவில் விநாயகர் திருமணம் ஆகாதவராக வும், வட இந்தியாவில் திருமணமானவராகவும்மக்கள் வழிபடு கின்றனர். விநாயகர் மக்கள் கோரிய கோரிக்கைகளை சித்திக்க அதாவது வெற்றிகரமாக நிறைவேற வைப்பவர் என்றும், நல்ல புத்தியைக் கொடுப்பவரென்றும் கொண்டாடப் படுபவர். இந்த சித்தியையும் புத்தியையும் பெண் களாகக் கருதி இவை விநாயகரின் மனைவியர் என்றுக் கூறுவர்... இப்படித் தன் மனைவிகளான சித்தியோடும் புத்தியோடும் சேர்ந்து காட்சி தரும் விநாயகப் பெருமானே சித்தி புத்தி விநாயகர் ஆவார்...

# விநாயகரின் மகன்கள்



சிவ மகாபுராணத்தில் பிள்ளையாரின் உடல் பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் இருப் பதாக கூறப்பட்டுள்ளது.

இதேப்போன்று விநாயகருக்குஇரண்டு மனைவிகளும், இரண்டு மகன்களும் இருப்பதாக வட இந்தியாவில் கொண்டாடப் படுகின்றனார்.

சித்தியின் மகன் **ஷேத்ரா (சுபீட்சத்தின் கடவுள்)** மற்றும் புத்தியின் மகன் **லபா (லாபத்தின் கடவுள்)** எனவும் கூறப்படுகிறது.

எந்த தொழிலையும் தொடங்கும் முன்பும், குடும்ப சுப நிகழ்வுவின் போதும் விநாயகரை வழிபடுபவர்களுக்கு விநாயகரின் புதல்வர் கள் ஆசி வழங்குவதாக கூறப்படுகிறது.

இதனால்தான் எந்த நல்ல செயலுக்கு முன்பும் விநாயகரை வணங்கும் வழக்கம் தோன்றியதாக கூறப்படுகிறது.

பெரும்பாலும் வட இந்தியாவில் கணேசரை அவர் துணைவியர்களுடன் வழிபட்டு கொண்டிருக்கின்றனர். இதுபற்றிய குறிப்புகள் கணேச புராணத்தில் உள்ளது.

புத்த மதத்திலும் விநாயகரை வணங்கும் வழக்கம் உள்ளது. புத்த மதத்தில்நடனம் ஆடும் பிள்ளையாரை வழிபடுகின்றனர்.

இந்தியா தவிர்த்து, திபெத், சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் பிள்ளையார் தனித்துவமான பிராந்திய சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கிறார். இந்தோனேஷியாவில் பிள்ளையார் உருவம் அச்சிடப்பட்ட பணமே பயன்படுத்தப்படுகிறது.

# பல கடவுள் இருந்தாலும் ஒரே வழிபாட்டுமுறை

இந்து சமயம்தான் உலகில் சமத்துவ மத மாகும். இந்து மதத்தில் பல கடவுள்கள் இருந்தாலும், ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு வழிபாட்டு முறை இருந்தாலும், ஒவ்வொரு கடவுளுக் கென்று தனிக் கோயில் கள் இருந்தாலும், ஒரு கடவுளை பின் பற்றி வணங்கும் இந்துக்கள் மற்ற இந்துக் கோவில்களுக்கு சென்று வழிபாடு நடத்த எந்த தடையும் இருப்பதில்லை.

ஆனால் மற்ற மதங்களில் ஒரே கடவுளாக இருந்தாலும், பல்வேறு வழிபாட்டு தலங்கள் உள்ளது. இதில் ஒரு வழிபாட்டுத் தலத்தைச் சேர்ந்தவர், மற்ற வழிபாட்டுத் தலத்திற்குச் சென்று வழிபட முடியாது. கடவுள் ஒருவராக இருந்தாலும் வழிபாட்டில் பிரிவினைகள் பல உள்ளது.

ஆனால் இந்து மதத்தில் பல கடவுள்கள் இருந்தாலும் வழிபாடு அனைவருக்கும் பொது வானதாக இருக்கும்.

| | |
|---|---|
| சைவம்: | சிவ வழிபாடு, மற்றும் சிவரூபமான சுடலைமாடன், கருப்பசாமி, ஐயனார், பெரியாண்டவர் குலதெய்வ வழிபாடு. |
| வைணவம்: | திருமால், ராமர், கிருஷ்ணர் வழிபாடு. |
| சாக்தம்: | சக்தி வழிபாடு மற்றும் சக்திரூபமான அங்காளம்மன், மாரியம்மன், பத்ரகாளி, திரௌபதி குலதெய்வ அம்மன் வழிபாடு. |
| சௌரம்: | முருகன் வழிபாடு. |
| கணாபத்யம்: | விநாயகர் வழிபாடு. |
| சௌரம்: | சூரிய வழிபாடு, பொங்கல் பண்டிகை. |
| ஸ்மார்த்தம்: | சிவன், சக்தி, திருமால், விநாயகர், முருகன், சூரியன் ஆகிய அறுவர் வழிபாடு. |

என்ற ஏழு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் எந்த கோவிலில் வேண்டுமானாலும் சென்று வழிபடமுடியும்

சிவனை வணங்குபவனாக இருந்தாலும் சரி, திருமாலை வணங்குபவனாக இருந்தாலும் சரி, கருப்பனை வணங் குபவனாக இருந் தாலும் சரி...



கொரோனாவில் புறக்கணிக்கப்பட்ட மாற்று மதத்தவர் சடலங்களுக்கும் இடம் கொடுத்தது இந்துக்களின் சுடுகாடுகள் தான்.

உலக அளவில் பல கடவுள்களையும், பல கோவில்களையும் கொண்ட இந்து மதத்தில் உள்ள இந்த சமத்துவம்தான் உலக மக்களை இந்து மதத்தை நோக்கி இழுத்துக் கொண்டிருக்கின்றன.


ஆன்மிகமலர் மெயில் புக்

# 3 காலங்களுக்குரிய பைரவ வழிபாடும் பலன்களும்



பைரவரை வழிபட ஒவ்வொரு மாத அஷ்ட மியும் சிறந்த நாளாகும். ஏனெனில் அன்றைய நாளில் அஷ்டலட்சுமிகளும், பைரவரை வழிபடுவ தாகவும், அதனால் அன்று அவரை வணங்கிட மக்கள் அனைத்து வளங் களையும் பெற்று சிறப்புடன் வாழலாம் என்பது ஐதீகம். பைரவருக்கு பிடித்தமானது சந்தனகாப்பு.

இதில் வாசனை திரவியங்களான புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சை கற்பூரம் சேர்த்து சந்தனக்காப்பு செய்து வழிபடுவது சிறப்பாகும். சந்தனகாப்பு செய்வதால் ஒருகோடி ஆண்டு பைரவ லோகத்தில் வாழ்ந்ததற்கு சமமாக இன்புற்று வாழ்வர் என்று சிவபுராணம் கூறுகிறது. பைரவருக்கு தாமரைப்பூ மாலை, வில்வ மாலை, தும்பைப்பூ மாலை, சந்தனமாலை அணிவித்து செவ்வரளி, மஞ்சள், செவந்தி மற்றும் வாசனை மலர்களை கொண்டு அர்ச்சனை செய்வது உத்தமம்.

பைரவருக்கு சர்க்கரைப் பொங்கல், தயிர்சாதம், தேன், செவ்வாழை, வெல்லப்பாயசம், அவல் பாயசம், நெய்யில் போட்டு எடுக்கப்பட்ட உளுந்து வடை, சம்பா அரிசி சாதம், பால் மற்றும் பல பழவகைகள் வைத்து வழிபாடு செய்வது மிகவும் நல்லது. பைரவரை காலையில் வழிபட சர்வநோய்களும் நீங்கும்.

## பகல் வழிபாடு:

பகலில் வழிபட விரும்பியது எல்லாம் கிட்டும்.

## மாலை வழிபாடு:

மாலையில் வழிபட இதுவரை செய்த பாவம் யாவும் விலகும்.

## இரவு வழிபாடு:

இரவு அதாவது அர்த்த சாமத்தில் வழிபட வாழ்வில் எல்லா வளமும் பெருகி மன ஒரு மைப்பாடும் கிடைத்து முக்திநிலை கிட்டும்.

## வழிபடும் முறை:

பைரவருக்கும் சிறு துணியில் மிளகை சிறு மூட்டையாக கட்டி நல்லெண்ணை அகல் தீபத்தை ஏற்றி வழிபட எல்லா வளமும் பெருகும். தேங்காய் மூடியில் நெய் நிரப்பி தீபம் ஏற்றி வழிபடலாம். அதேபோல் பூசணிக்காயை மத்தி யில் இரண்டாக பிளந்து அதனுள் எண்ணை அல்லது நெய் நிரப்பி தீபம் ஏற்றி வழிபடலாம். மாயப்பிறப்பறுத்து மகிமைகள் பல தரும் ஸ்ரீ பைரவரைக் குறித்த ஒவ்வொரு வழிபாட்டுக்கும் குறிப்பிட்ட பலன்கள் உண்டு.

## கிழமைக்கேற்ற பலன்:

### ஞாயிற்றுக்கிழமை:

ராகு காலத்தில் ருத்ராபிஷேகம், வடை மாலை சாற்றி வழிபட்டால் திருமணப்பேறு கிடைக்கும். கடன் வாங்கி வட்டியும், அசலும் கட்ட முடியாமல் தவிப்பவர்கள் ஞாயிற் றுக்கிழமை ராகு காலத்தில் ஸ்ரீ கால பைரவருக்கு முந்திரிபருப்பு மாலை கட்டி, புனுகு சாற்றி, வெண் பொங்கல் நைவேத்தியம் இட்டு வழிபட்டு பிரார்த்தனை செய்தால் நலம் கிடைக்கும்.

### திங்கட்கிழமை:

வில்வார்ச்சனை செய்திட சிவனருள் கிட் டும். திங்கட்கிழமை அல்லது சங்கடஹர சதுர்த்தியன்று பைரவருக்கு பன்னீர் அபி ஷேகம் செய்து சந்தனக் காப்பிட்டு புனுகு பூசி நந்தியாவட்டை மலர் மாலை அணிவித்து வழி பட்டு வந்தால் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் அகலும்.

### செவ்வாய்க்கிழமை:

மாலையில் மிளகு தீபம் ஏற்றி வழிபட்டு வந் தால் இழந்த பொருளை திரும்பப் பெற லாம்.

### புதன்கிழமை:

நெய் தீபம் ஏற்றி வழிபட்டால் பூமி லாபம் கிட்டும்.

### வியாழக்கிழமை:

விளக்கேற்றி வந்தால் ஏலம், பில்லி, சூன்யம் விலகும்.

### வெள்ளிக்கிழமை:

மாலையில் வில்வ அர்ச்சனை செய்து வந்தால் செல்வச் செழிப்பு உண்டாகும்.

### சனிக்கிழமை:

சனி பகவானுக்கு குரு பைரவர். ஆகவே சனிக்கிழமையன்று இவரை பிரத்தேயமாக வழிபடுவதால் அஷ்டமச்சனி, ஏழரைச்சனி, அர்த்தாஷ்டமச் சனி விலகி நல்லவை நடக்கும். கால பைரவர் உடலில் பூமியைத் தாங்கும் எட்டு நாகங்களும் மாலையாக இருந்து அலங்கரிப்பதால் இவரை வழிபட்டால் சர்ப்ப தோஷங்கள் நீங்கும்.

## உலகிற்கு ஒளி கொடுத்தவர்:

ஒருமுறை தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தை அழிக்க நினைத்த சிவபெரு மான், பிட்சாடன மூர்த்தியாக வடிவம் ஏற்றுச் சென்றார். அவரால் தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத முனிவர்கள் சிவ பெருமானை அழிக்க முயற் சித்தனர்.

கடும் கோபம் கொண்ட சிவபெருமான் காலாக்னியால் தாருகாவனத்தை அழித்தார். இதனால் உலகம் முழுக்க இருள் பரவி சூரியனும் மறைந்து போனது. அப்போது பைரவ மூர்த்தியே எட்டுத் திசைகளிலும் தோன்றி ஒளியை உண் டாக்கினார். இப்படி எட்டுவிதமாகத் தோன்றிய பைரவர்கள் அஷ்ட பைரவர்கள் என்று பூமியில் வணங்கப் படுகிறார்கள்.

ருரு பைரவர், சண்ட பைரவர், குரோதன பைரவர், உன்மத்த பைரவர், சம்ஹார பைரவர், பீக்ஷன பைரவர், கபால பைரவர் என எட்டு பைரவர் மட்டுமின்றி ஆதிசைவர்கள் 64 விதமான பைரவர்களையும் வணங்கி வந்துள் ளார்கள், மேலும் சிவன் கோவிலை பாது காப்பவரும், சிவன் கோவிலின் சொத்துக்களை பாதுகாப்பவருமாக பைரவர் திகழவதாகவும், இரவு நடை அடைக்கும்போதும், நடை திறக்கும் போதும் சிவன் கோவில்களில் பைரவருக்கு சிறப்பு பூஜைகள் செய்வது வழக்கம் என்று புராணங்கள் கூறுகின்றன.

– ஷ்யாம்சுந்தர், சென்னை



ஆன்மிகமலர் மெயில் புக்

16-31 ஆகஸ்ட் 2020 5

www.aanmeegamalar.com

# கடனை தீர்த்து, பண வரவை அதிகரிக்கும்

# விநாயக மந்திரம்

விநாயகரின் மூல மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கங்கணபதயே
வரவரத ஸ்ர்வ ஜனம்மே வசமினய ஸ்வாஹா

இருபத்தெட்டு அட்சரங்களை உடைய இம்மந்திரம் பலவிதமான சக்திகளையும், சித்திகளையும் அளிக்கவல்லது. செல்வம், பூமி, ஆகர்ஷணம், வசியம், குண்டலி வின்யாசம் முதலிய அனேக சித்திகள் இம்மந்திர ஜபத்தால் கைகூடும்.

அருகம்புல், தாமரை, வில்வதளம், செவ்வரளி போன்ற நறுமணம் உடைய புஷ்பங்களால் விநாயகரை பூஜை செய்தால் செல்வச் செழிப்பும் ஞானவளமும் கைகூடும். செல்வத்திறவுகோலாக இம்மந்திர உபாசனை நிகழ்ந்து வந்துள்ளது.

கணபதியை மட்டும் வழிபடுபவர்கள் கணபதி உபாசகர்கள் என அழைக்கப்படுகிறார்கள். கர்ண வழிபாடு என்று இதைக் கூறுவர். கணபதி உபாசகர்கள் கருப்பு, நீலம் போன்ற வண்ண ஆடைகளை அணிவதைத் தவிர்க்க வேண்டும். சிவப்பு, பொன் வண்ண உடைகள் மிகவும் ஏற்றவை. துளசியை இவர்கள் கிள்ளக் கூடாது. துளசியை விநாயகருக்கு அணிவிக்கக்கூடாது.



கணபதி மந்திரங்களை பிரம்ம முகூர்த்த வேளை எனப்படும் அதிகாலை 4.30 முதல் 6.00க்குள் ஜபிப்பது மிக நன்று என கணேச உத்தர தாயினி உப நிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

விநாயகரை தேய்பிறை சதுர்த்தி தோறும் வழிபடுவது சங்கடகர சதுர்த்தி என்று வழங்கப்படும். அதுவும் அந்நாளில் வன்னிமரத்தடியில் வழிபடுவது மிக நன்று. மாசி மாதம் வரும் சதுர்த்தி செவ்வாய்க் கிழமையன்று(தகுந்த ஜோதிடரை அணுகி உரிய நாளை அறிக) துவங்கி ஓராண்டு சங்கடஹர சதுர்த்தியை மாதந்தோறும் பின்பற்றி வர வேண்டும். இதனை செவ்வாய்க் கிரக அதிபதி பின்பற்றினார். வன்னிமர விநாயகருக்கு அரிசி போடுவதன் மூலம், ஏழரை சனி, அஷ்டமச் சனி இலிருந்து தப்பிக்கலாம்.

உச்சிஷ்ட கணபதி மந்திரம்

ஓம் நமோ பகவதே ஏகதம்ஷ்ட்ராய
ஹஸ்தி முகாய,லம்போதராய
உச்சிஷ்ட மகாத்மனே
ஆம் ஹ்ரேம் ஹ்ரீம்
கம் கேகே ஸ்வாஹா

வேப்பங்குச்சி, ஊமத்தம்பூ, நெய் இவைகளால் இவருக்கு ஹோமம் செய்ய வேண்டும்.

கடன் தீர கணபதி மந்திரம்

ஓம் கணேசருணம் சிந்தி
வரேண்யம் ஹீம் பட்ஸ்வாஹா
ஹே பார்வதி புத்ரா ருணம்
நாசம் கரோதுமே
ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் அபீஷ்ட
சித்திம்மே தேஹி சரணாகத
வத்ஸல
பக்த்யா ஸமர்ப்பயே துப்யம்
ஸ்வாஹா
ஸ்ரீசக்ரேசாய ஸ்ரீமகா
கணபதயே ஸ்வாஹா

கருங்காலி குச்சியால் கணபதி ஹோமம் செய்ய எவ்வளவு பெரியளவில் கடன் இருந்தாலும் அது மிக விரைவாக தீர்ந்து விடும்.

மஹாஹஸ்தி விநாயகர்

பெரிய துதிக்கையை உடைய இவர் பெரும் தனத்தை (அதாவது கோடிக்கணக்கில் ரூபாய் களாக) அள்ளி வீசுபவராக இருக்கிறார்.

அப்படி நமக்க இவரது அருள் கிடைக்க பின்வரும் மந்திரத்தை லட்ச உருவேற்றினால் போதும். நமது பாவங்களும் தீரும்.செல்வமும் ஞானமும் நமக்குக் கிடைத்துவிடும்.

ஓம் ஆதுான இந்த்ர க்ஷீமந்தம் சித்ரம்
க்ராபம் ஸ்ங்க்ருபாய
மஹாஹஸ்தி தக்ஷிணேன
வாஞ்சா கல்பலதா கணபதி

நமது சகல விருப்பங்களையும் அள்ளி வழங்குவதால் இவருக்கு வாஞ்சை கணபதி என்ற பெயர் ஏற்பட்டது.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம்
ஐம் கஏஈ லஹ்ரீம்
தத்ஸவிதர் வரேண்யம் கணபதயே
க்லீம் ஹஸகஸல ஹ்ரீம் பர்க்கோ
தேவஸ்யதீமஹீ
வரவரத சவு ஸஹல ஹ்ரீம்
த்யோயோநப்ர சோதயாத்
ஸர்வ ஜனம்மே வசமானய ஸ்வாஹா

இந்த மந்திரம் 100 கோடி சூரியனுக்குச் சமமானதாகும். தகுந்த குரு உபதேசம் மூலமாக இந்த மந்திரத்தை தினமும் ஜபித்துவரவும். நீங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும்.

ஒவ்வொரு யுகத்திலும் விநாயகப்பெருமான் ஒவ்வொரு பிறவி எடுத்துள்ளார்.

கிருத யுகம்: காஸ்யப முனிவருக்கும் அதீதீ தேவிக்கும் பிள்ளையாக அவதரித்து அசுரர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டினார். கிருத யுக அவதாரத்தில் பிள்ளையாரின் திருநாமம் மகாகடர்.

திரேதா யுகம்: அம்பிகை பார்வதியின் பிள்ளையாக அவதரித்து, அழகான மிகப்பெரிய மயிலை தம் குழந்தைப் பருவத்தில் பிடித்து விளையாடியதால் மயூரேசர் என்ற திருநாமம்

துவாபர யுகம்: கஜானனன் என்ற திருநாமத்துடன் அவதரித்து, பராசர மகரிஷி மற்றும் பராசர மகரிஷியின் தேவி வத்ஸலாவால் சிறப்பாக வளர்க்கப்பட்டார்.

கலி யுகம்: சிவபெருமானுக்கும் அம்பிகை பார்வதி தேவிக்கும் குழந்தையாக அவதரித்து அதர்மம் செய்வோரின் செயல்களில் தடங்கல் களையும் தர்மநெறியில் இருப்போரின் இன்னல்களைப் போக்கியும் வருவதாகக் கணேச புராணம் குறிப்பிடுகின்றது

# கற்பூரவள்ளி இலை இருந்தா, கை நிறைய காசு வரும்!



கற்பூரவள்ளி செடிக்கு மருத்துவ குணம் எவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ, அதே அளவிற்கு அந்த வாசத்திற்கு எந்த ஒரு கெட்ட சக்தியும் நெருங்காது என்றும் சொல்லப்பட்டுள்ளது. கண்ணுக்குத் தெரியாத ஏதாவது பிரச்சினை இருந்தால் கூட, இந்த வாசத்திற்கு தெறித்து ஓடும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

அதாவது, நன்றாக லாபத்தை தந்து கொண்டிருந்த தொழில் திடீரென்று முடக்கம் அடைந்து விட்டாலும், வீட்டில் கண்ணுக்கு தெரியாத கெட்ட சக்திகளின் மூலம், கண் திருஷ்டியின் மூலம், பிரச்சினைகள் இருந்தாலும், அதை சரி செய்ய சாம்பிராணி தூபம் போடுவதை நாம் வழக்கமாக வைத்திருப்போம். அந்த சாம்பிராணி தூபத்தில், இந்த கற்பூரவள்ளி இலைகளை சேர்த்து, அந்த வாசனையை வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ தூபமாக போட்டோமேயானால், பிரச்சனைகளில் இருந்து சுலபமாக விடுபடலாம்.

கற்பூரவல்லி செடியில் இருந்து சில இலைகளை பறித்து, நன்றாக உலர வைத்து, பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். வாரம்தோறும் வெள்ளிக்கிழமைகளிலும், செவ்வாய்க் கிழமைகளிலும் நீங்கள் வழக்கம்போல் சாம்பிராணி தூபம் போடும் போது, அதில் ஒரு ஸ்பூன் இந்த கற்பூரவள்ளி இலை தூளையும் சேர்த்து, அந்தப் புகையை மூலை முடுக்குகளிலெல்லாம் காண்பித்து வர, பல நாள் தீராத இருந்த, பல பிரச்சனைகளும் தீரும்.

குறிப்பாக பண கஷ்டம், வீண் விரையம், வர வேண்டிய கடன் தொகை வரவில்லை, தொழில் முடக்கம் இப்படிப்பட்ட பண ரீதியான பிரச்சனைகளுக்கு சுலபமான தீர்வு தரும், சுலபமான பரிகாரம் தான் இது. கற்பூரவள்ளி செடியை நட்டு வீட்டுவாசலில் வைத்தோமேயானால், வீடு சுபிட்சம் அடையும். கண்ணுக்குத் தெரியாத எந்த கெட்ட சக்தியையும் நுழைய விடாமல் பாதுகாக்கும் சக்தியும் இந்த செடிக்கு உண்டு.

# உன்னிஷ்டப்படி நீ துறக்கவோ வேலை செய்யவோ முடியாது



ரமண மகரிஷிகளின் உபதேசித்தபடி ஆன்ம சாதனையில் ஈடுபடும்போது பக்தர்கள் ஆழ்ந்த பேரமைதியை உணர்கிறார்கள். அப்படி அனுபவித்து உணர்ந்த பேரமைதியை மீண்டும் குடும்பம் மற்றும் உலகாயத விஷயங்களில் ஈடுபட்டு அதை (பேரமைதியை) இழக்க விரும்பாத ஒரு பக்தர் இவ்வாறு பகவானிடம் வினவினார்:

உலக விஷயங்களில் இருக்கும்போதே சமாதி (பேரமைதி) சுகம் அனுபவிப்பது சாத்தியமா?

“நான் வேலை செய்கிறேன்” என்ற உணர்ச்சியே தடை. “வேலை செய்வது யார்?” என்று விசாரித்து, உன் உண்மை சொரூபத்தை நினைவில் கொள். வேலை செய்யவோ, துறக்கவோ முயல வேண்டாம். உன் முயற்சியே பந்தம். விதிக்கப்பட்டது நடந்தே தீரும். வேலையை விதிக்கப்படாதிருந்தால் நீ தேடினாலும் அது உனக்குக் கிட்டாது. வேலையே விதித்திருந்தால் நீ அதை விட்டு அகல முடியாது. உன்னைக் கட்டாயமாக வேலை வாங்கிவிடும். ஆகையால் அதையெல்லாம் பரமேச்வரனிடம் விட்டுவிடு. உன்னிஷ்டப்படி நீ துறக்கவோ வேலை செய்யவோ முடியாது.

– மகரிஷி வாய்மொழி நூலிலிருந்து.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com

# வேத வியாசர்

பராசர மகரிஷி என்பவருக்கும் சத்யவதி என்ற மீனவப் பெண்மணிக்கும் பரமேஸ்வரனின் அனுகிரஹத்தால் மகனாக வ்யாஸர் பிறந்தார்.

சத்யவதி பராசர மகரிஷியிடம் பின்வரும் மூன்று நிபந்தனையின் படி திருமணம் புரிகிறார்.

நம் இருவரையும் யாரும் பார்க்கக் கூடாது

மீனவ பெண்மணி என்பதால் தன் மீது வீசும் மீன் நாற்றம் நீங்கி பரிமள சுகந்த வாசம் வீச வேண்டும். நான் உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றினாலும் நான் கன்னித் தன்மையுடன் இருக்க வேண்டும்

தன் குழந்தை அறிவாளியாக நன்கு படித்தவன் ஆகவும் மீனவனாக இல்லாமல் ஒரு முனிவன் ஆக விஷ்ணு பகவான் அம்சமாக இருக்கவேண்டும் என்று சத்யவதி நிபந்தனை செய்தாள்.

வியாசர் க்ருஷ்ண த்வீபம் என்ற இடத்தில் பிறந்ததால் இவரை "க்ருஷ்ண த்வைபாயனர் என்றும் அழைப்பர். வசிஷ்டரின் குலத் தோன்றல் என்பதால் வாசிஷ்டர் என்ற பெயரும் உண்டு.

சப்த சிரஞ்சீவிகளில் ஒருவர்.

பதரிகாஸ்ரமத்தில் நித்யம் வாசம் புரிவதால் பாதராயணர் என்ற பெயரும் இவருக்கு உண்டு.

பதினெட்டுப் புராணங்களை இயற்றியவரும் இவரே.

நான்கு வேதங்களை முறையாக தொகுத்ததால் வேத வ்யாஸர் என்னும் பெயர் பெற்றார். அப்படி முறையாக தொகுத்த வேதங்களை தன்னுடைய பிரதான 4 சிஷ்யர்களிடம் முறையே, ரிக் வேதத்தை பைல முனிவரிடமும், யஜுர் வேதத்தை வைசம்பாயன முனிவரிடமும், ஸாம வேதத்தை ஜைமினி முனிவரிடமும், அதர்வண வேதத்தை ஸுமந்த் முனிவரிடமும் ஒப்படைத்து, இன்றளவும் நின்று நிலைபெறச் செய்தவர் என்பதால் அவர் வேதவ்யாஸர் என்றே அழைக்கப் படுகிறார். வ்யாஸர் என்றால் தொகுப்பாளர் (சிஷீனீஜீவீறீமீக்ஷீ) என்று பொருள்.

பின் இவர் பிரும்ம சூத்திரம் என்ற அரிய நூலை எழுதி நமக்கெல்லாம் ஒரு பொக்கிஷமாக அருளியிருக்கிறார்.மேலும் நமக்கு வேதம், உபநிஷதம், புராணங்கள் போன்று பல பொக்கிஷங்கள் அவர் மூலம் கிடைத்திருக்கின்றன. ப்ரஹ்ம ஸூத்ரம் என்ற இவரது நூல் தான் நம் நாட்டின் அத்வைத, விசிஷ்டாத் வைத, த்வைத வேதாந்தங்களின் தோற்றுவாய் ஆகும்.

மகாபரதப்போரை கண் தெரியாமல் இருந்த திருதாஷ்டிரர் பார்க்க விரும்பினார். யுத்த பூமியில் நடக்கும் எல்லா காட்சிகளையும் அரண்மனையில் இருந்தபடியே வர்ணிக்கும் சக்தியை சஞ்சயனுக்கு அளித்து திருதாஷ்டிராரது ஆசையைப் பூர்த்தி செய்தவர் ஸ்ரீவேதவியாசர் தான். அவரிடம் அத்தனை சக்தி இருந்தது.

வ்யாஸர் கூற ஸ்ரீ கணபதி தன்னுடைய தந்தங்களில் மஹாபாரதம் இயற்றினார். இவ்விடம் பத்ரியில் மனா என்னும் இடத்தில் வ்யாஸ குஹா என்று அழைக்கப்படுகிறது.



மூன்று மதத்தினருக்கும் [அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம்] இவரே மூல குரு.

பகவத் கீதையின் 10 ஆவது அத்யாயமான விபூதி யோகத் தில் ஸ்ரீ கிருஷ்ணன், முனிவர்களில் நான் வியாசன் என்று கூறுகிறார்.

இதிஹாஸங்களான ராமாயணம் வால்மீகி முனிவராலும், மஹாபாரதம் வியாச முனிவராலும் இயற்றப்பட்டவை. ராமாயணம் 24,000 ஸ்லோகங்களைக் கொண்டது என்றால், மஹாபாரதம் (அதில் அடங்கியுள்ள பகவத்கீதை (ம) விஷ்ணு ஸஹஸ்ர நாமம் உட்பட) 1,00,000 ஸ்லோகங்களைக் கொண்டது என்றால் எவ்வளவு பெரிய சாதனை என்று மலைக்கத் தோன்றுகிறது அல்லவா?

வியாசர் முனிவர்களுக்கெல்லாம் முனிவர்;ரிஷிகளுக்கெல்லாம் ரிஷி. அதனால் தான் வியாச பூஜை, எந்த வேதாந்தத்தைப் பின்பற்றும் ஸ்வாமிகளும் கடைப்பிடிக்க வேண்டிய நோன்பாக நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது.

வியாசருக்கு எவ்வளவு பெரிய மகத்துவத்தைத் தந்துள்ளனர் என்றால், அவரை பகவான் வ்யாஸர் என்று அழைப்பதுடன், அவரை "ஒரு தலை உடைய பிரம்மா ; இரு கை உடைய விஷ்ணு , நெற்றிக்கண் இல்லாத சிவன்" என்று போற்றுகின்றனர் :

அசதுர்முகயத் ப்ரஹ்மா
அசதுர்புஜ விஷ்ணவே
அபால லோசனஃ சம்பு
பகவான் பாதராயண:

ஒவ்வொரு வருடமும் ஆனி மாதத்தில் வரும் பௌர்ணமி குரு பூர்ணிமா அல்லது வியாச பூர்ணிமா என்று அழைக்கப்படுகிறது.

பொதுவாக குரு பரம்பரை பின்வருமாறு வரையறுக்கபட்டுள்ளது:

பரமேஸ்வரன் ஸ்ரீமன் நாராயணன் சதுர் முக ப்ரஹ்மா வசிஷ்டர் சக்தி பராசரர் வ்யாஸர் சுக ப்ரஹ்மம் கௌட பாதர் கோவிந்தா பகவத் பாதர் ஸ்ரீ ஆதி சங்கராச்சார்யர் என்று வருகிறது. தினமும் அதி காலையில் இந்த குரு பரம்பரையை நினைத்து வணங்கினால் சகல தேவதைகளை வணங்கிய பலன் கிடைக்கும்.

வ்யாஸம் வஸிஷ்ட நஃத்தாரம்
சக்தேஃ பௌத்ரம் அகல்மஷம்!
பராசராத்மஜம் வந்தே
சுகதாதம் தபோநிதிம்
வ்யாஸாய விஷ்ணு ரூபாய
வ்யாஸ ரூபாய விஷ்ணவே!
நமோவை ப்ரஹ்ம நிதயே
வாசி'ஷ்டாய நமோ நம:!!

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593




ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# வேலை தலைகீழாக பிடித்த வேலவன்

கோட்டயம் சங்கனாசேரியில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் பெருண்ணா என்ற கிராமத்தில் உள்ள முருகன் கோவில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது, உலகத்தில் உள்ள முருகன் கோவில்களில் இல்லாத வகையில், முருகனின் ஆயுதமான வேலை தலைகீழாக பிடித்தபடி காட்சி தரும் முருகன் ஆலயம் இங்குதான் அமைந்துள்ளது. இத்தலம் ஆயிரம் ஆண்டுகள் பழமையானது.

கோயிலின் பிரதான தெய்வம் சுப்பிரமணியன் என்றாலும், துணை தெய்வங்கள் விஷ்ணு, மகாதேவன், விநாயகர், சாஸ்தா மற்றும் நாகர். பிரதான தெய்வம், சுப்பிரமணிய சுவாமி, கிழக்கு நோக்கிய நிலையில் காட்சி தருகிறார்.

**இக்கோவிலில் உள்ள முருகப்பெருமான், தாராசுர வதம் முடிந்ததும், அசுரனை கொன்ற கோபத்துடன் வேலை தரையில் பதித்து நின்ற கோலத்துடன் காட்சிதருவதாகவும் கூறப்படுகின்றன.**

தீய சக்திகளை வென்றதன் நினைவாக இந்த கோயில் கட்டப்பட்டுள்ளது. பிரதான தெய்வமான 'அசுரர்களுடன்' கடுமையான கோபத்திற்குப் பிறகு அவர் வந்துவிட்டதால்,






ஆன்மிகமலர் மெயில் புக்



முருக பகவான் இந்த கோவிலில் கோபமான வடிவத்தில் சித்தரிக்கப்படுகிறார். உலகில் எங்கும் அவர் கோபமான வடிவத்தில் சித்தரிக்கப்படுவதில்லை, இந்த கோவிலில் மட்டுமே முருகப்பெருமான் கோபத்துடன் காட்சிதருகிறார்.

மேலும் மதுரை மாநகரை ஆட்சி செய்வது மீனாட்சி தேவி என்று புராணங்களில் கூறப்படுவதைப் போன்று, சங்கனாசேரியை ஆட்சி செய்யும் தெய்வமாக பெருண்ணா முருகப்பெருமான் விளங்குவதாக கோவில் தல புராணத்தில் கூறப்படுகிறது.

இக்கோயில் பல்வேறு காலக்கட்டங்களில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் சுமார் 750 ஆண்டுகளுக்கு முன்பு உம்பிளி மற்றும் பெருநா எனும் இரு கிராமங்களில் அந்தணர்கள் வசித்து வந்தனர். பெருநா எனுமிடத்தில் வசித்த சாத்விக குணம் கொண்ட அந்தணர்கள் சிவ பக்தர்கள்.

உம்பிளியில் வாழ்ந்த அந்தணர்கள் மாய, தந்திர வேலைகளைச் செய்து வந்தனர், இவர்களுக்கு பெருணாவில் வசித்த அந்தணர்கள் மற்றும் மக்களின் மீது பொறாமை கொண்டு உம்பிளி பகுதி மக்களின் சிவன் கோவிலை இடித்து சேதப்படுத்தினர். அப்போது சேதமான கோவிலில் இருந்து பெருநா ஊர் மக்கள் சிவபெருமான் சிலையை மட்டும் பாதுகாப்பாக மீட்டனர்.

தொடர்ந்து வந்த இந்த இரண்டு பிரிவினருக்கிடேயே உள்ள பிணக்கைத் தீர்ப்பதற்காக இடமனா இல்ல நம்பூதிரி என்பவர் பழனி முருகன் கோவிலுக்குப் புனிதப்பயணம் சென்றார். அங்கு காட்சியளித்த பழனி முருகப்பெருமான், ‘பத்தினம்திட்டா மாவட்டத்தில் செல்லும் கொடுந்துறா ஆற்றில் கிடைக்கும் தனது சிலையை எடுத்து வழிபட்டு வந்தால், அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்’ என்றார்.

அதன்படி இடமனா நம்பூதிரி ஆற்றில் கிடைத்த சிலையை எடுத்துச் சென்று பெருநா கிராமத்தில் நிறுவினார். விஷயம் அறிந்த உம்பிளியினர் பெருநா முருகன் கோவிலை அழிக்க முயன்றனர். இதனை தடுப்பதற்காக இடமனா நம்பூதிரி, அவரது நண்பரான காரணவர் என்பவருடன் உம்பிளியை நோக்கிச் சென்ற போது வழியில், உம்பிளி கிராமத்தினர் செய்த மாய, தந்திரங்களால், நெருப்புப் பந்து ஒன்று உருவாகி அது கோவிலை அழிக்கும் வேகத்துடன் வந்து கொண்டிருந்தது. இடமனா நம்பூதிரி அதனைத் தடுக்கும்போது அந்த பூஜையில் காரணவர் பலியானார், இருப்பினும் பூஜையை தொடர்ந்து செய்த இடமனா நம்பூதிரி அந்தத் தீயசக்தியை முழுவதுமாகக் கட்டுப்படுத்தினார்.

அதன் பிறகு, உம்பிளி கிராமத்தினர் செய்த அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. பிற்காலத்தில் உம்பிளி கிராமமே முற்றிலும் அழிந்து காடாக மாறிப் போய்விட்டதாக ஆலய வரலாறு சொல்கிறது. இதன்பிறகு பல்வேறு காலத்தில் கோவில் புதுப்பிக்கப்பட்டதாக தல வரலாறில் கூறப்படுகிறது.

இக்கோவிலில் நிறுவப்பட்டிருக்கும் முருகன் சிலை, முன்பொரு காலத்தில் முனிவர்கள் மற்றும் தேவர்களாலும் வணங்கப்பட்டு வந்தது என்று கூறப்படுகிறது.

இக்கோவிலில் உள்ள முருகன் சிலையின் தோற்றத்திற்கான காரணம்:

சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய முருகப்பெருமான் அசுரர்களை அழிக்கப் போருக்குச் செல்லும் போது முருகப்பெருமானை வாழ்த்திய தந்தை சிவப்பரம் பொருள், அவருக்குப் பதினொரு ஆயுதங்களைக் கொடுத்தார். தாய் பார்வதிதேவி தன்னுடைய சக்தி அனைத்தையும் சேர்த்து வேல் ஒன்றை உருவாக்கிக் கொடுத்தார்.

முருகப்பெருமான் தாரகாசுரனுடன் போரிடும் போது முருகப்பெருமானின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத தாரகாசுரன் எலியாக மாறி, கிரவுஞ்ச மலைக்குள் சென்று பல மாய வித்தைகளைக் காட்டத் தொடங்கினான். அதனைக் கண்டு கோபமடைந்த முருகப்பெருமான், தாய் தந்த வேலாயுதத்தைக் கையில் எடுத்து அந்த மலையை நோக்கி வீசியெறிந்தார். அந்த வேல் கிரவுஞ்ச மலையைப் பல கூறுகளாக்கி உடைத்தெறிந்து, தாரகாசுரனையும் அழித்துத் திரும்பியது.

தாரகாசுரனை அழித்த இரத்தம் படிந்த வேலை கையில் பிடித்த முருகப்பெருமான், வேலில் படிந்திருந்த இரத்தம் மண்ணில் இறங்கும்படியாக வேலைத், தலைகீழாகத் திருப்பி தரையில் ஊன்றி நின்றார்.

முனிவர்களும், தேவர்களும் மூன்று அசுரர்களில் ஒருவன் அழிந்ததை எண்ணி மகிழ்ந்து, முருகப்பெருமானை வாழ்த்தினர்.

சில முனிவர்கள் முருகப்பெருமானைத் தாங்கள் கண்ட அதே தோற்றத்தில் சிலையமைத்து வழிபட்டு வந்தனர்.

அந்தச் சிலையே பிற்காலத்தில் இடமனா நம்பூதிரிக்குக் கிடைத்தது என்று சொல்லப்படுகிறது. இதனையே அவர் பெருநாவில் ஆலயம் அமைத்து வழிபட்டதாக நம்பப்படுகின்றது.

கோவில் அமைப்பு :

கேரளக் கட்டுமானப்பணிகளுடன் அமைந்திருக்கும் இக்கோவிலின் கருவறையில், ஆறடி உயரத்திலான முருகப்பெருமான் கிழக்கு திசை நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். அவரது கையில் இருக்கும் வேல், தலைகீழாக இருக்கிறது.

இந்த ஆலயத்தில் மலையாள நாட்காட்டியின்படி, தனு (மார்கழி) மாதம் பத்து நாட்கள் நடைபெறும் ‘பள்ளிவேட்டை விழா’ சிறப்பானதாகும். இவ்விழா நாட்களில் சாக்கியார் கூத்து உள்ளிட்ட கேரள மரபு வழி கலைநிகழ்ச்சிகள் பல நடத்தப்படுகின்றன. மகரம் (தை) மாதம் வரும் தைப்பூசத் திருவிழா விமரிசையாக நடக்கிறது. பக்தர்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

இக்கோவிலுக்கு வந்து வழிபடுபவர்களுக்கு எதிரிகளின் தொல்லைகள் அனைத்தும் நீங்கும். வளமான வாழ்வு கிடைக்கும். தீராத நோயால் அவதிப்படுபவர்கள், காவடி எடுத்து வந்து வழிபடுவதாக வேண்டிக் கொண்டால், அவர்களின் நோய் நீங்கி நலம் பெறுகிறார்கள்.

ஆலய முகவரி:

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,
பெருநா, சங்கனாச்சேரி, கோட்டயம்,
கேரள மாநிலம் 686102
Phone: 4812420109

– கீதா–ராஜன், போன்:8825844033

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக
டவுன்லோடு செய்தும்
படிக்கலாம்



# பிள்ளையாரும் ஆன்மிக மலர்களும்

- மதுரையிலிருந்து 20 கி.மீ தொலை வில் திருபுவனம். கோட்டை எனும் இடத்தில் விநாயககோரக்கர் அருள்கிறார். நோய் களைத் தீர்ப்பதிலும் சனி தோஷம் தீர்ப்ப திலும் விநாயகர் வடிவில் உள்ள கோரக்க சித்தர் அருள்கிறார்.
- ராமநாதபுரம் உப்பூரில் வெயிலுகந்த விநாயகர் அருள்கிறார். தட்சிணாயன காலங்களில் இந்த விநாயகரின் தெற்கு பகுதியிலும் உத்திராயண காலங்களில் வடக்கு பகுதியிலும் கதிரவன் தன் கிரணங்களால் இந்த விநாயகரை வணங் குகிறான்.
- கிருஷ்ணகிரியில் உள்ள பாகலூரில்விநாய கப் பெருமான் சிவலிங்க ஆவுடையாரின் மேல் வலது கையில் ஒடிந்த தந்தத்துடனும் இடக்கையில் கொழுக்கட்டையுடனும் ஈசான்ய திக்கை நோக்கி அமர்ந்தருள் புரிகிறார்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சேரன்மாதேவியில் உள்ளது மிளகு பிள்ளையார் ஆலயம்.மழை பொய்த்தால் இவரது உடலில் மிளகை அரைத்துத் தடவி அபிஷேகம் செய்வித்தால் உடனே மழை பொழியும் அற்புதம் நிகழ்கிறது.
- மதுரை கீழமாசி வீதியில் மொட்டை விநாயகரை தரிசிக்கலாம். பார்வதியால் அவள் காவலுக்குப் படைக்கப்பட்ட சிறு வனின் தலையை ஈசன் அறியாமல் கொய்தார். அவர் மொட்டை விநாயகராக இத்தலத்தில் அருள்வதாக ஐதீகம். இத்தலத்தில் திருவுளச்சீட்டு போட்டுப் பார்ப்பது வழக்கமாக உள்ளது.
- விழுப்புரம், தீவனூரில் நெற்குத்தி விநா யகர் லிங்க வடிவில் அருள்கிறார்.லிங்கத் திருமேனிக்கு அபிஷேகம் செய்யும் போது அதில் உள்ள விநாயகரை தரிசிக்கலாம்.
- நாகப்பட்டினம் செண்பகபுரியில் உள்ளது ஆதி கும்பேஸ்வர சுயம்பு விநாயகர் ஆலயம். இவர் சந்நதி கோஷ்டங்களில் மும்மூர்த்திகளும் அருள்வது வித்தியாச மான அமைப்பு.
- தூத்துக்குடி, ஆறுமுகமங்கலத்தில் ஆயி ரெத்தெண் விநாயகர் அருள்கிறார். இத்தல சித்திரை மாத பிரம்மோற்சவத்தின் ஏழாம் நாள் பஞ்சமுக ஹேரம்ப கணபதி நடராஜப் பெருமானுடன் திருவீதியுலா வருகிறார்.
- கோயமுத்தூர் மத்தம்பாளையத்தில் காரண விநாயகரை தரிசிக்கலாம்.இக் கோவிலில் விநாயகர் அருகில் நந்தியம் பெருமான் வீற்றிருப்பது தனிச் சிறப்பு.
- சேலம் மாவட்டம், ஆத்தூரில் தலையாட்டி கணபதி எனும் காவல் கணபதியை தரிசிக்கலாம்.இவர் தலையை ஆட்டும் விதமாக இடதுபுறம் சாய்ந்தபடி அருள் கிறார்.



- சிதம்பரத்திலிருந்து 17 கி.மீ.தொலைவில் உள்ள திருநாரை யூரில் அருள்கிறார் பொள்ளாப் பிள்ளையார். நம்பியாண்டார் நம்பிக்கு அருள் புரிந்த விநாயகர் இவர். ராஜராஜசோழனுக்கு சைவத் திருமுறை களைத் தொகுக்க உதவியவர். உளியால் செதுக்கப்படாத (பொள்ளா) பிள்ளையார்.
- தஞ்சாவூர், கணபதி அக்ரஹாரத்தில் விநாயகர் சதுர்த்தி விசேஷமாகக் கொண் டாடப்படுகிறது. இப்பகுதி மக்கள் தங்கள் வீடு களில் விநாயக சதுர்த்தியைக் கொண் டாடுவதில்லை. இந்த ஆலயத்திலேயே வந்து கொண்டாடுகின்றனர்.
- ஓசூர்,பேரிகை பாதையில் பாகலூர் ஏசியன் பேரிங் கம்பெனி அருகில் மாடி விநாயகர் அருள்கிறார்.இவர் சந்நதியில் இருபுறங்களிலும் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரும், மலைக்கோட்டை மாணிக்க விநாயகரும் சந்நதி கொண்டுள்ளனர்.
- திருச்சி உச்சிபிள்ளையார் கோவி லின் அடிவாரத்தில், மாணிக்க விநாயகர் கோவில் உள்ளது. இந்த பிள்ளையாருக் குக் கீழே யந்திர பிரதிஷ்டை செய்துள் ளார்கள்.
- திருவையாறுக்கு அருகேயுள்ள திரு வேதிக்குடி வேதபுரீஸ்வரர் கோவிலில் வேத விநாயகர் அருட்பாலிக்கிறார்.இவர் வேத கோஷத்தை சற்றே செவியை சாய்த்த வண்ணம் கேட்பதால் செவி சாய்த்த விநாயகர் என்கிறார்கள்.
- கும்பகோணம், ஆடுதுறைக்கு அருகே யுள்ள மருத்துவக் குடியில் தேள் போன்ற வடிவமைப்பில் விருச்சிகப் பிள்ளையார் அருள்கிறார்.
- திருச்சிக்கு அருகேயுள்ள பிட்சாண்டார் கோவிலில் சிம்ம வாகனத்தின் மீது பஞ் சமுக விநாயகர் ஐந்தடி உயரத்தில் அருட் கோலம் காட்டுகிறார்.
- தஞ்சை மாவட்டம் பேராவூரணியில் மராட்டிய மன்னர் துளசாஜி மகராஜா வால் கட்டப்பட்ட நீலகண்ட விநாய கரை தரிசிக்கலாம்.நீலகண்டரின் பிள்ளை யாதலால் நீலகண்ட பிள்ளையார் என்ற ழைக்கப்படுகிறார்.
- தஞ்சாவூர் கீழவாசலில் வல்லப அம்பிகா சமேத சுவேத விநாயகர் (வெள்ளை விநாயகர்) ஆலயம் அமைந்துள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர் களால் வழிபட்ட இந்த விநாயகருக்கு கோட்டை விநாயகர் என்றும் பெயருண்டு.

– தொகுப்பு: ஸ்ரீ வர்ஷினி, சென்னை

# பரிணாம மனித வளர்ச்சி
# சிந்தனை சக்தியில் அடங்கியுள்ளது

88
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


குருப்ரியா

குருதேவர் அருளுகிறார்: "ஒரு மனிதனாக, சிந்தனை சக்தியின் மூலம் நீங்கள் உங்களுடைய மிகச் சிறந்த பரிணாம வளர்ச்சி அடைகிறீர்கள். ஒவ்வொரு நாளும் உங்களுடைய மனதைச் செம்மையாக்குவதற்கு சிறிது நேரத்தை ஒதுக்குங்கள். உங்களை வீட்டு வேலைகளிலும் அல்லது ஆக்கபூர்வமற்ற செயல்களிலும் இரவும் பகலும் ஈடுபடுத்திக் கொள்வதை விட, சிறிது நேரம் படிப்பது சாலச்சிறந்தது. மனம் போன போக்கில் வாழாமலிருக்க உங்களுடைய வாழ்க்கையைத் திட்டமிடுங்கள்; ஆனால் உங்கள் சுபாவம், உங்களுடைய நேரத்தை அளவிற்கு அதிகமாக திட்டமிடுவதாக இருந்தால், அந்த அதீதமான நினைவிலிருந்தும்கூட விலகிவிடுங்கள். வாழ்க்கையின் மற்றும் இதர அற்பச் செயல்களை திட்டமிடுவதற்கு மட்டுமே உங்களது மனதை உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக அல்லது சோம்பேறியான மனம் உங்களுடைய நேரத்தை நழுவ விட்டுக்கொண் டிருப்பதற்குப்பதிலாக, சிறிது நேரம் அதை ஆக்கபூர்வமான படிப்பில் ஈடுபடுத்துங்கள். கையில் சில பிரயோஜனமான, படிக்கக்கூடிய நூல்களை வைத்திருங்கள். மேலும் ஓய்வு நேரங்களில் அதைக் கவனத்துடன் படியுங்கள். பலவகையான இலக்கிய நூல்களை வைத்திருப்பதால் கொஞ்சம் அறிவியல், கொஞ்சம் வரலாறு, தத்துவ சாத்திரம், வாழ்க்கைச் சரிதம், பயணம் ஆகியவை உங்களுடைய மனதை விரிவுபடுத்தி எழுச்சியூட்டும் எதுவானாலும் அதிக பலன் உண்டு."

"மேலும் அவர் தொடர்கிறார்; " புத்தகங்கள் அன்பான நண்பர்களாக இருக்க முடியும். மேலும் நீங்கள் தேர்ந்தெடுப்பவை சிறந்தவைகளாக இருப்பின், அவற்றிலிருந்து அதிக பலனை நீங்கள் அனுபவிப்பீர்கள். எமர்ஸனையோ அல்லது மில்டனையோ அல்லது பிளேட்டோவையோ அல்லது சில உயர்ந்த மகான்களையோ முதலில் படிக்கும்போது மிகவும் கடினமாகத் தோன்றலாம். ஆனால் சிறிது நேரம் கழித்து அவர்கள் எழுதியுள்ளவற்றைப் பற்றி நீங்களே சிந்தித்துக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள். நீங்கள் ஏதோ ஆதாயம் அடைந்துவிட்டதைப் போன்று உணர்வீர்கள். ஏனெனில் அந்த மகான்கள் அனைவரும் தங்களுடைய ஞானத்தை இறைவனின் எல்லையற்ற களஞ் சியத்திலிருந்தே பெற்றார்கள். இல்லாவிடில் ஒரு வாழ்நாள் காலத்தில் உங்களுக்கு அந்தக் கருத்துகள் தோன்றாது."

"இருப்பினும் அநேகர் இடையறாது படிக்கிறார்கள். ஆனால் அவர்கள் என்ன படித்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்குக் கூற இயலாது. ஒரு புத்தகத்தைப் படிப்பதற்கான மிகச் சிறந்த முறை, அதைப்பற்றி அக ஆராய்ச்சி செய்வதாகும். உங்களுடைய சொந்த வாழ்வில் எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பாருங்கள் தராதரம் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் படிக்கும் அனைத்தையும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளாதீர்கள். அது உங்கள் மனதில் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டும். பயனுள்ளவைகளாக இருப்பதற்கு புத்தகங்கள் உங்களை சிந்திக்கத் தூண்டவேண்டும். அவை அதைச் செய்தால், உங்கள் மனம் செம்மையாகிக் கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள்."

மனிதனின் பரிணாம வளர்ச்சி, சிந்தனை சக்தியில் அடங்கியுள்ளதாக குருதேவர் கூறுகிறார். எதையும் சிந்தித்து ஆராய்ந்து அதனுள்ளிருக்கும் உண்மையை தெளிவுறப் புரிந்து கொள்வதுதானே விவேகம். விவேகத்தை யார் தந்துள்ளதென்றால் அது இறைவன்தான். நம் வாழ்க்கையில் நிகழுமின்ற அல்லது நாம் எதிர்கொள்கின்ற எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது சிறு விஷயமாக இருந்தாலும் சரி, பெரிய விஷயமாக இருந்தாலும் சரி நன்கு சிந்தித்துப்பார்க்கும்போது அதைப்பற்றிப் புரியநேரும். சிந்தனை சக்திக்கு நாம் நல்ல வளம் போட்டு வளர்க்க வேண்டும். என்ன வளம் போட்டு வளர்க்க வேண்டும் என்று கேள்வி எழலாம். நாம் உலகத்துடனும் உலகப்பொருளுடனும் ஒன்றிணைந்து வாழ்வோமானால், இன்றைய உலகத்தில் என்னென்ன நிகழ்கிறதோ அதுதான் நம் சிந்தனைக்கு எட்டும். ஆனால் அவற்றையெல்லாம் மனதிலிருந்து தூக்கிப் போட்டு நல்ல சிந்தனைக்கு என்ன தேவையோ அதனுடன் மனம் இணைய வேண்டும். மனம் எப்பொழுதும் இறைவனுடனே இருக்குமேயானால் அவன் அருள்வான். ஒரு பக்தனின் மனம் இறைவனில் இருந்தால் அவனுக்கு



என்ன தேவையோ அவற்றையெல்லாம் அருளும்போது சிந்தனை சக்தியை ஏன் இறைவன் அருளமாட்டான்? மற்ற அனைத்தையும் கைவிட்டு இறைவனை மட்டும் மனதில் நிறுத்தியவாறு ஒரு பக்தன் வாழந்தால் அவனுக்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் இறைவன் தருவான்.

விவேகம் தேவையென்றால் அதைச் சிந்திப்பதற்கான புத்தியும் திரும்ப அதை செயல்படுத்துவதற்கான மனமும் வேண்டும். இவ்வாறு இறைவனுடன் இருந்து ஒருவன் வாழ்வானேயானால் அவன் மனம் தூய்மையாகவும் உறுதியாகவும் வைத்துக்கொள்ள இயலும். மனத்தூய்மைதான் மிகவும் முக்கியம். வேறு எந்த விதமான எண்ணங்களுமின்றி இறைசிந்தனையுடன் இருந்தாலே எல்லாம் தானாகவே ஒன்றுக்குப்பின் ஒன்றாக வருவதை நாம் அறிய இயலும். தியானத்தால் மட்டும்தான் ஒருவன் தன் மனதை மாற்றிக்கொள்ள முடியும்.

உலகப்பொருளாசையை கைவிடுவதை உறுதியாக்க வேண்டும். அதே சமயம் இறைவனை எல்லாவற்றையும்விட மேலாக நேசிப்பதுதான், இறைவனை அறிவதற்கும் அடைவதற்கும் முக்கியமாகத் தேவை. பயிற்சிகள் எல்லாம் முக்கியம்தான் என்றாலும் அவை இரண்டாம் பட்சம்தான்.

இந்தப் பரிணாம வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு மற்ற எல்லா ஆசைகள் மற்றும் தீய பழக்கங்கள் அனைத்தையும் கைவிட வேண்டும் என்பதுதான் மிகவும் அவசியம். அனைவருக்கும் இறைவனை அடைய வேண்டும் என்ற ஆசை இருக்கலாம். ஆனால் அவர்களின் மனமானது அதற்கு ஒத்துழைக்காது.

மனதில் பல்வேறு ஆசைகள் குவிந்திருக்கும். குருதேவருக்கு மனரீதியான தேக்கம் வந்தபோது அவருடைய குரு ஸ்ரீ யுக்தேஸ்வரரால் எதுவுமே செய்ய இயலவில்லை என்கிறார் அவர். ஒரு சீடனை அவனுடைய ஆசையை நிறைவேற்றுவதற்காக அவனை குருதேவரே இறைவனின் சாம்ராஜியத்திற்கு தன்னுடைய சக்தியால் அனுப்பிவைத்தார் எனில் கூடிய சீக்கிரம் அந்த சீடன் பூமிக்கு வந்து விடுவான். அது அவனுடைய மனம் தூய்மையடையாததால் பரிணாம வளர்ச்சியை அவன் எய்தவில்லை. எனவே அவன் மீண்டும் தானாகவே திரும்ப பூமிக்கு வந்துவிடுகிறான். அதற்காகவே குரு தமது சீடனை முதலில் மனத் தூய்மை அடையச்செய்து, பரிணாம வளர்ச்சியை எய்தச் செய்வார். அதன் பின்னர் தான் அந்த சீடனுக்கு இறைவனின் சாம்ராஜியத்திற்குச் செல்வதற்கான வழி வகைகளை கற்றுத்தருகிறார். எனவே ஒரு சீடனை முதலில் தயார் படுத்துவார் குருதேவர். அதனால்தான் குரு தேவை என்பது. குரு இல்லையேல் இறைவனை அடைய முடியாது.

பிறப்பில் எழுந்தும் இறப்பில் மூழ்கியும் ஜீவாத்மா மாறிச் சென்று கொண்டேயிருக்கும். இவ்வாறான நிலைக்கு ஒரு ஜீவன் மாறிக்கொண்டிருக்கின்ற காரணம் என்னவென்றால் மன அழுக்குதான். ஐம்புலன்களினால் ஏற்படுகின்ற எல்லாமே மன அழுக்குகளாகின்றன. மொத்தத்தில் புலன்கள் அடங்கினால் பிரம்ம உணர்வு ஏற்படத் தொடங்குகிறது. இது சம்பந்தமாக பகவத்கீதை கூறுகிறது என்னவென்றால்;

மோகாசா மோக கர்மாணோ
மோகஜ்ஞானா விசேதஸா:
ராக்ஷஸீமாஸுரீஞ்சைவ ப்ரக்ருதிம்
மோஹினீம் ஸ்ரீதா:

சித்த சுத்தியில்லாத காரணத்தால்தான் யதார்த்தத்தில் ஞானமுண்டாகாதது. சித்தத்தில் ரஜோகுணமும். தமோகுணமும் அதிகரிக்கும் போது, உண்மையல்லாத பொருட்களில் உண்மையைக் காண்பதும் அவற்றின்மேல் வளர்ந்து கொண்டிருக்கின்ற ஆசைகளும் பின்னர் அவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளையும் செய்து கொண்டிருப்பர்.

ராக்ஷஸ குணமும் அசுரகுணமும் வளர்ந்து பெருகினால் இப்படித்தான் மாறுவார்கள். இவ்வகை குணங்கள் உருவாகிக்கொண்டிருக்கும்வரை உண்மையான ஞானத்தை அறிய இயலாது. சித்தத்தின் அசுத்திதான் அதற்குக் காரணம். அழுக்கு நிறைந்துள்ள மேற்படி சித்தத்தினால் சத்தியத்தை அல்லது பரம்பொருளை எவ்வளவுதான் தேடினாலும் அறிய இயலாது. இப்படிப்பட்டவர்கள், இறைவனை மனித ஸ்வரூபமென்று கூறிக்கொண்டு அதன்மீது விசுவாசம் கொள்கின்றனர். (பகவத் கீதை அத் 9 ஸ்லோகம் 12)

இவ்வாறு பகவான் கிருஷ்ணன் பகவத் கீதையில் கூறியுள்ளார். மனதைத் தூய்மைப்படுத்துவதற்கும் இறைவனிடத்தில் அனைத்திலும் மேலான அன்பையும் பற்றையும் வைத்து அவனுக்காக மட்டும் வாழ்ந்து, அவனுக்காக மற்றெல்லா உலகப்பொருட்களையும் கைவிட்ட நிலையில் யார் ஒருவன் இறைவனைக் காண்பதற்கான பாதையாகின்ற தியானத்தின்மூலம் செல்கிறானோ அவன் மட்டும்தான் இறைவனை அறியவும் காணவும் அடையும் முடியும். அது அவனுடைய விவேகமும் அதனால் ஏற்படும் பரிணாம வளர்ச்சியும் தான் காரணம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909



# கர்ணனின் பூர்வ ஜென்ம இரகசியம்!

நமது பாரதம் எத்தனையோ ஆச்சர்யங்களையும் அதிசயத்தக்க நிகழ்வுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்றால் மிகையாகாது. மஹா பாரதம் என்னும் மாபெரும் இதிஹாசத்தில் அப் படி கொட்டி கிடைக்கும் வைரங்கள் கோடானு கோடி. அப்பேற்பட்ட மெய்சிலிர்க்க வைக்கும் ஓர் பதிவு.

மகாபாரதத்தில் வரும் மாவீரன் கர்ணன் குந்திதேவியின் புத்திரன் என்ற இரகசியம் அவன் இறந்த பிறகே உலகம் அறிந்தது.

கொடைக்குப் பெயர் பெற்ற கர்ணனோ இறப்பதற்கு சில நாட்கள் முன்பு தான் அறிந்தி ருந்தான்.

அதுவும் கிருஷ்ண பகவானின் லீலையால்!

மிகவும் நல்லவனான கர்ணனுக்கு ஏன் இப்படிப்பட்ட ஒரு வாழ்வு?

இதற்கு விடை கர்ணனுடைய பூர்வ ஜன்ம இரகசியத்தில் உள்ளது.

ஆம்! பூர்வ ஜன்மத்தில் கர்ணன் சஹஸ்ர கவசன் என்ற அசுரனாக இருந்தான். என்றால் நம்ப சற்று கடினமாக உள்ளது அல்லவா? அவனின் அட்டூழியம் அதனால் அதிகரித்தது. தேவர்களை துன்புறுத்தி மாபாதகம் செய்தான்.

பிரம்ம தேவனிடம் அவன் பெற்ற வரத்தின் படி அவனுடைய சரீரம் ஆயிரம் சட்டைகளால் போர்த்தப்பட்டிருந்தது.

எவரும் அந்த ஆயிரம் சட்டைகளை நீக்காமல் அவனைக் கொல்ல முடியாது.

அவனைத் தாக்க விரும்பும் வீரன் 12 வருடங்கள் தவமிருந்து விட்டு, அதன் பின்னர் 12 வருடங்கள் அவனுடன் தொடர்ந்து போர் புரிந்தால் ஆயிரம் கவசங்களுள் ஒன்றை அறுக்க முடியும். இவ்வாறு 24 வருடங்கள் வீதம் தவமும், போரும், யாகமும் செய்து ஆயிரம் கவசங்களை ஒன்றன் பின் ஒன்றாக அறுத் தெறிந் தால் சஹஸ்ர கவசன் மடிவான்.



எனினும், இதனைச் சாமான்ய மனி தர்களால் சாதிக்க இயலவில்லை.

எனவே, சஹஸ்ர கவசன் தேவர் களுக்கு செய்யும் கொடுமைகள் அனைத்தும் தொடர்ந்தன.

அமரர்கள் மகாவிஷ்ணுவை நாடி அசுர உபாதையை ஒழிக்க உதவுமாறு வேண்டினர்.

விண்ணவர் மீது இரக்கம் கொண்ட மகாவிஷ்ணு அசுரர் கொடுமையை ஒழித்து அமரவாசிகளுக்கு ஆறுதல் உண்டு பண்ணத் திருவுளம் கொண்டு நர நாராயணர்களாக (அதாவது நரனும் அவரே, நாராயணனும் அவரே) தனது சக்தியை இரண்டு விதத்தில் வடிவமைத்தார். இப்படியாக அவதரித்தார்.

ஸஹஸ்ரகவசனை ஸம்ஹரிப்பதற்கு அவர்கள் கூட்டு முயற்சி செய்தனர். நரன் 12 வருடங்கள் தவம் புரிய, நாராயணர் அசுரனுடன் போர் புரிந்து கவச மொன்றை அறுத்துத் தள்ளினார். இப்படிப் பல வருடங்கள் விடா முயற்சி செய்து 999 கவசங்களை நர, நாராயணர்கள் அறுத்து எறிந்தனர்.

இதற்குள் பிரம்ம பிரளயமே வந்து விட்டது.

எஞ்சி நின்ற ஒரு கவசத்துடன் சஹஸ்ரக வசன் சூரிய லோகம் போய்ச் சேர்ந்தான். ‘தன் னைத் தேடி வந்து அபயம் கேட்டவன் அரக்கனாக இருந்தாலுமே! அவனுக்கு அடைக்கலம் அளிக்க வேண்டிய கடமை தன்னுடையது’ என்பதை உணர்ந்த சூரிய தேவன். அவனைத் தனது சூரிய லோகத்தில் இருக்குமாறு பணித்தார்.

சஹஸ்ரகவசன் தனக்கு அடைக்கலம் அளித்த சூரிய தேவனையே தனது இஷ்ட தெய்வமாக பாவித்து வணங்கி வந்தான். சூரிய லோகத்திலேயே அவனது அப்பிறவி முடிந்தது.

இந்த சஹஸ்ரகவசனே அடுத்த ஜன்மத்தில் சூர்ய புத்திரனாக கர்ணன் என்ற பெயரில் மீதமுள்ள பூர்வ ஜன்ம கவசம்) ஒரு கவசத்தோடு பிறப்பெடுத்தான்.



எஸ்.ரகுராமன்

இந்தக் கவசமும் அறுக்கப்பட வேண்டியதே!

இந்தக் காரியத்திற்காகவே பக வான் மகாவிஷ்ணு நர ரூபத்தில் அர்ஜுனனாகவும், நாராயண அம்சத் தில் கிருஷ்ணனாகவும் ஜனித்தனர்.

12 ஆண்டுகள் பாண்டவர்கள் வன வாசம் செய்தது. அந்த நரனுடைய 12 வருடத் தவமேயாகும்.

பகவான் ஸ்ரீமன் நாராயணனின் சுதர்சனத்தாலும் துளைக்க முடியாத வஜ்ரம் கர்ணனின் கவச குண்டலம். இந்த ரஹஸ்யத்தை அறிந்துதான் இந்திரனின் மூலம் எஞ்சியுள்ள ஓர் கவசத்தையும் யாசகமாக பெற்றார். தேர்ந்த ராஜதந்திரம் அது!!

க்ரிஷ்ணனால் மட்டுமே சாத்தியப்பட கூடிய மகா மகா ராஜதந்திரம்.

கவசம் நீங்கியதால் தான் அர்ஜுனனால் கர்ணனை கொல்ல முடிந்தது.

நம் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கு பின்னால் நமது பூர்வ ஜென்ம தொடர்பு இல்லாமல் எதுவும் நடப்பது இல்லை.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com




இணையதளத்தில்
இலவசமாக
டவுன்லோடு செய்தும்
படிக்கலாம்



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
செந்தில்நாதன்
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# மனவீடு, சிந்தனை என்ற இரண்டு வீடுகள் இருக்கின்றன

புத்தி உள்ள மனிதன் சிந்தித்தால், அவன் தேவனா? மனிதனா? என்பது தெரிந்துவிடும்.

❖❖❖

இறைவனை எண்ணுவதனால் இதயம் சிவந்தே துடிக்கிறது. இறைவனை நினைக்காத நீல இதயத்தை ஆண்டவன் படைப்பதே இல்லை.

❖❖❖

சிந்தனையின் பெரிய கோயில் புத்தி.

❖❖❖

பட்டாம் பூச்சியைப் பார்த்தே மகிழ்வது போல், உலகையும், பொருளையும் பார்த்தே சிந்தி.

❖❖❖

பட்டாம் பூச்சியின் உள்ளமான அதன் இறக்கையை எடுத்துவிட்டால் இறந்துவிடும். அதுபோல் பக்தனின் உள்ளத்தில் இறைவன் இருந்தால் தான்... அவன் வாழுவான்.



❖❖❖

கருடனைப் போன்று மௌனமாய் இறைவனை உள்ளத்தில் சுமந்துகொண்டே இரு. நந்தியைப் போன்று மௌனமாய் இறைவனை பார்த்துக் கொண்டே இரு.

❖❖❖

கிழிந்த துணியை, ஊசி நூல் கொண்டு தைத்தால் கட்டிக் கொள்ளலாம். அதுபோல் பேசிக் கிழித்துத் தள்ளும் வாயை மனமென்னும் ஊசியுடன் சேர்த்தால் இறைவனையே காணலாம்.

❖❖❖

வெட்டிப் பேச்சுக்களை எல்லாம் விடு. வேர் உள்ள பேச்சுக்களெல்லாம் உனது முன்னேற்றத்தின் விழுதுகள் என உணர்வாய்.

❖❖❖

பேசிக் கொண்டே இரு. சாதனைகளை நிகழ்த்தாத பேச்சுக்களை எல்லாம் மௌனம் என்று உணர்ந்துவிடு.

❖❖❖

புத்தி பழுதுபட்டால் சிந்தனை கெடுவது ஒரு பக்கம். மற்றொரு பக்கம் மனதைக் கரையான் அரித்து அரித்து. அது கரையான் புற்றாக மாறிவிடுகிறது. இதில் கரையான், பாம்பு, தேள் இவைகளைத் தவிர ஆண்டவன் இருக்க நியாயம் இருப்பதில்லை.

❖❖❖

மனிதனிடம் மனவீடு, சிந்தனை என்ற இரண்டு வீடுகள் இருக்கின்றன. இப்பொழுது சிந்தனை வீடு கெட்டிருப்பதால் மனிதனின் மனவீட்டில் "இறைவன்" குடியேறுவதில்லை.

❖❖❖

ஜாக்கிரதையான பக்தி, தீவிர பக்தி என்று இரண்டு பக்திகள் உண்டு. ஜாக்கிரதையான பக்தியில் உலகம் முன்னே வைக்கப்பட்டு கடவுள் பின்னே தள்ளப்படுகிறான்.

❖❖❖

தீவிர பக்தியில் கடவுள் முன்னே வைக்கப்பட்டு, உலகம் பின்னே தள்ளப்படுகிறது.

❖❖❖

சிந்தனைக்குத் தந்திரம் செய்து சிந்திக்கவே முடியாது. அதனால் மந்திரமும், கடவுளும், சிந்தனையை வரவேற்கிறார்கள்.

❖❖❖

பயமென்னும் பேயை உன்னிடமிருந்தும், சமுதாயத்திடமிருந்தும் ஒட்டு. அனைத்துமே சரியாகிவிடும்.

❖❖❖

கொத்தவரங்காய் பித்தத்தை ஏற்றும். முருங்கைக்காய் வாயுவைத் தூண்டும். இதுபோல் பக்தியைத் தூண்டும் காய்கறிகளே இல்லை. அதனால் பக்தியைக் கடவுளே தூண்டுகிறான்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

# அற்புதம் வாய்ந்த தீட்சை மகத்துவங்கள்



மனிதப் பிறவியின் நோக்கம் இறைவனை அடைவதே" என்பது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் வாக்கு; இதைத்தான் பல்வேறு மகான்களும் கூறிவருகின்றனர்.

இறைவனை அடைய பல்வேறு வழிமுறைகள் இருந்தாலும், குருவின் உதவியுடன் இறைவனை அடைவது என்பது ஒரு உன்னத நிலையாகும். இறைவனை அடைவதற்குண்டான தடைக்கற்கள் எவை, ஒரு மனிதன் இறைவனை அடைய வைக்கும் வழிமுறைகள் என்ன என்பதை ஆன்மிக செயல்களால் நன்கு அறிந்து, தான் அனுபவித்து அடைந்த பலன்களை, ஆன்மிகத்தில் புதிதாக நுழைபவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை குறுகிய காலத்தில் ஆன்மிகத்தில் ஒருசில தெளிவினை தரவைக்கும் அனைவரும் குருநாதர்களே....

இதன்மூலம் அவர்கள் பெற்ற ஆன்மிக அறிவை, எளிமையான விளக்கங்கள் மூலம் அறிந்து கொண்டு, குருநாதர் போதித்தவற்றின் துணையுடன் அடுத்த நிலைக்கு செல்லும்போது, குருநாதரின் பிரார்த்தனையுடன் நமது ஆன்மிக தேடல் கலக்கும்போது, ஆன்மிகத்தில் அடுத்த நிலைக்கு செல்ல மிகப்பெரிய பாலமாக விளங்குபவர் குருநாதர்.

இதுபோன்ற குருநாதர்கள் சைவம் வைணவம் போன்றவற்றில் தனக்கு விருப்பமான இறைவனை முதன்மை தெய்வமாக ஒருவரை சரணடைந்து, அந்த தெய்வத்தின் அருளை பெறுவதற்குரிய ஆன்மிக செயல்களில் ஈடுபடும்போது, ஒருசில மந்திர, தந்திர, யோக, தியான, பூஜா விதிகளை கடைபிடித்து அதன்மூலம் ஒருசில நிலைகளை கடந்திருப்பார்.

பட்டினத்தார், மாணிக்கவாசகர், கண்ணப்ப நாயனார் போன்ற என்னற்றவர்கள் சாதாரண மனிதனாக வாழ்க்கையைத் துவக்கி ஏதோ ஒரு மனித தேடுதலை அறிந்த பின், தன் ஆசா பாசங்களை துறந்து, மனிதநிலையிலிருந்து குரு நிலைக்கு வந்தவர்கள் ஏனையோர். இப்படிப்பட்டவர்கள் முன்பு மனித வாழ்க்கையில் தாங்கள் அனுபவித்த தேவையற்ற விஷயங்களை எவ்வாறு புறக்கணித்தனர் என்பதை பல்வேறு பதிகங்களில் எடுத்துறைத்துள்ளனர்.



கீதா–ராஜன்

பட்டினத்தார் குருநாதர் நிலையை அடைவதற்கு முன்பு, பொன் பொருளை சம்பாதிக்கும் நோக்கத்தை கொண்டவராக மிகப்பெரிய வணிகராக இருந்து, இவை அனைத்தும் ஏன் நாம் சேர்த்துவைக்க பாடுபடுகின்றோம் என்ற எண்ணம் தோன்றும்போது அந்த பொன் பொருள் அனைத்தும் அவருக்கு மண்ணிற்கு சமமானதாகவே கருதினார். இவை நிரந்தரம் அல்ல ஆனாலும் மனித மனம் அதை நாடுகிறது என்ற உண்மையை உணர்ந்து அந்த நிலையிலிருந்து மீண்டு வந்து இறைவனை அடையும் வழிமுறைகளில் தனது கவனத்தை செலுத்தினார்.

இவர் பாடிய பதிகங்களை ஆராய்ந்து பார்த்து வாழ்க்கையில் துன்பத்திற்கு காரணம் என்ன என்பதை அறிந்த பலர், இவரை குருவாக ஏற்று தங்கள் அக புற வாழ்க்கையை மேன்மையுடன் வாழ்ந்துள்ளனர்.

உலகியல் அறிவு எல்லாமே ஏதோ ஒரு ஆசிரியர் வழியே தான் நாம் அறிகிறோம். அப்படியிருக்க எல்லாவற்றிலும் உயர்ந்ததான பரமார்த்திக அறிவு, அதில் சுய அனுபவம் பெற்ற ஒரு குரு வழியே தான் ஒரு ஆன்மீக சாதகனுக்கு வந்து சேரும். அப்படிப்பட்ட குருவிடம் பூரண சரணாகதி செய்வதன் மூலமே ஒரு ஆன்மீக சாதகன் தன் அகங்காரத்தைத் துறந்து அறிய வேண்டியதை அறிய முடியும்.

அதற்கு, குருவருளின் ஒரு அங்கமாக, அதற்கு வழிகோலும் ஒரு அடிப்படைச் சாதனமாக, குருவின் அளப்பெரும் கருணையின் ஒரு அடையாளமாகக் குரு தருவதுதான் தீட்சை எனலாம்.

'தீக்ஷா' என்னும் சமஸ்கிருதச் சொல்லிருந்து தீட்சை என்ற தமிழ்ச்சொல் பிறந்தது. இதற்கு கொடுத்துக் குறைப்பது என்று பொருளாகும்.'ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்னும் பொருளுடையது என ஆகம நூல்கள் விளக்கம் தருகின்றன.

நமது முயற்சி, உடம்பின் உள்ளும் புறமும்

உள்ள அழுக்குளை நீக்குதலும், ஆகாரம் ஊட்டிச் சுத்தமாய் வளர்த்தலுமாம். நீரினால் வெளி உடம்பைக் கழுவிச் சுத்தம் செய்யலாம்; உள்ளிருக்கும் உடம்பு சூக்கும உடம்பு; அதில் உள்ள தீய அழுக்குகளை, ஆசமனம், மந்திர செபம், அகமர்ஷணம் முதலிய அனுட்டானக் கிரியைகளினாலேயே போக்க முடியும். இந்த உண்மைகளை அறிந்தே நம் சமயத்தில் ஏழு வயதில் தீட்சை பெற வேண்டும் என்ற விதி சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில் கால் கைகளை அடக்கி ஆளும் பக்குவம், மனதில் இச்சைகள் தோன்றி விருத்தியாகக் கூடிய காலமும், அப்பருவகாலத்திலிருந்துதான் உதிக்கின்றன என்பது கருதியே. அவ்வயதில் தீட்சை பெற்றிருந்தால், அனுட்டான சாதனைகளினால், தேகத்தையும் மனதையும் அடக்கி நம் வசப்படுத்தவும், தீச் செயல்கள் தோன்றாமலும் செய்ய முடியும்.

பொதுவாக, பக்தி மார்க்கம் என்று வரும்போது, அங்கே பக்தி செய்ய ஒரு இஷ்ட தெய்வம் வேண்டியிருக்கிறது. நமது மனதுக்குப் பிடித்தமான ஒரு இறைவனை நாம, ரூபத்துடன் (பெயர், உருவத்துடன்) அன்பொழுக வழிபடுவது, மற்ற எல்லா ஆன்மீக மார்க்கங்களையும் விட, இந்தக் கலியுகத்தில் பெரும்பாலார்க்கு எளிதான வழி; இது, இந்து மதத்தில் கண்டறியப்பட்டு மகான்களால் உபதேசிக்கப்படும் உண்மை.

இறைவன் ஒருவனே, அவன் உருவ அருவங்களுக்கு அப்பாற்பட்டு இருப்பவன் என்பதே இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவம் என்றாலும், அதே இறைவன் பக்தர்களின் விருப்பத்துக்கும் ருசிக்கும் ஏற்ப, வெவ்வேறு நாம ரூபத்தில் வந்து அருள் புரிவான் என்பது இந்து மதத்தின் துவைதக் கொள்கை.

இதன்படி பார்த்தால், சிவன், விஷ்ணு, தேவி, கணபதி, முருகன், மற்றும் இறையவதாரங்களான ராமன், கிருஷ்ணன், நரசிம்மன் போன்ற தெய்வங்களை அவரவர், அவரவரது ருசிக்கேற்பத் தம் இஷ்ட தெய்வமாகப் போற்றிப் பக்தி செலுத்த, குரு தரும் மந்திர தீட்சை உதவுகிறது.

"இறைவனும், அவனது திருநாமமும் வேறு வேறு அல்ல" என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர். இறைவனின் திரு நாமம் 'ஓம்', 'ஹ்ரீம்', 'க்லீம்' போன்ற பீஜ சொற்களோடும், நமஹ: எனும் போற்றுதலோடும் வெவ்வேறு முறையில் கோர்க்கப்பட்டு, பலம் பெற்ற மந்திரங்களாக ஒளிர்வதை நமது பண்டைய ரிஷிகள் கண்டுணர்ந்தனர். ரிஷிகள் கண்டு பிடிக்கவில்லை; அவர்களது தவத்தின் மூலம் அம்மந்திரங்கள் அவர்களுக்குள் காட்டித் தரப்பட்டன. அதனால் ரிஷிகளை 'மந்திர திருஷ்டாக்கள்' (மந்திரங்களைக் கண்டவர்கள்) என்பது மரபு.

அப்படி, பல பக்தி சம்பிரதாயங்களைச் சேர்ந்த ரிஷிகள் அவரவரது சம்பிரதாயங்களை ஒட்டிய தெய்வத்திற்கான மந்திரங்களைத் தமது சீடர்களுக்கு வழங்க, அவை அந்தந்த சன்யாச பரம்பரை வழியாக அடுத்தடுத்த தலைமுறையில் வரும் சீடர்களுக்கு குருமார்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற தீட்சைகளை தனது சீடர்கள் மற்றும் பொது மக்களில் ஒருசிலருக்கு பல்வேறு சமயங் களில் பல மகான்கள் வழங்கியுள்ளனர். இவ்வாறு தீட்ஷை வழங்கும்போது, தீட்சை பெறுபவர்களுக்கு ஏற்ப ஒருசில பீஜா மந்திரங்களை, அவர்களின் தகுதிக்கேற்ப, கிரக நிலைக்கேற்ப, ராசிக்கேற்ப என பல்வேறு விதங்களில் வழங்குவார்கள்.

மின்சாரம் தயாரிக்கும் இடத்தில் பல கிலோவாட் மின்சாரம் இருந்தாலும், ஒரு மின்விளக்கு அல்லது மின்விசிறியை அந்த மின்சாரத்தை நேரடியாக பெற்று ஒளிர்விக்கவோ சுழலவோ செய்ய முடியாது. அந்த மின் சாதனங்கள் தாங்கும் திறனுக்கேற்ப, பலகிலோவாட் மின்சாரத்தை பிரித்து, மின்சாரத்தின் வீரியத்தை குறைத்து பல கட்டங்களில் பல கருவிகள் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவுகளில் பகுத்து, மின்சாதனங்களை இயக்கும் கருவிகள் மூலம் அந்த மின்விளக்கிற்கோ அல்லது மின்விசிறிக்கோ கொடுத்தால் அந்த மின்சாதனங்கள் சிறப்பாக இயங்கும்.

இதுபோன்றுதான் தீட்சை என்பதுகூட, பல்வேறு மந்திர தந்திர வழிமுறைகள் இருந்தாலும், ஒவ்வொரு மனிதனுக்குரிய மந்திரங்களை பகுத்து, அந்த மந்திரங்கள் தீட்சை பெறுபவர்களுக்கு சாதகமாக இருக்கும்படி உருவாக்குவதுதான் குருநாதர்களின் மிகப் பெரிய பணியாகும்.

அன்னை சாரதா தேவி சொல்வார்: "உலகியலில் சிக்கிக்கொண்டு, "அம்மா, காப் பாற்று" என்று என்னிடம் வந்து கதறும் போது நான் என்ன செய்வது? அவர்கள் ஒன்றும் ஜபிக்க மாட்டார்கள் என்று தெரிந்தும் நான் அவர்களுக்கு மந்திரம் தருகிறேன்; மந்திரம் நான் தந்து விட்டால், அவர்கள் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டுவிட்டேன் என்று அர்த்தம்; பின் என்ன செய்வது? பல சமயம் அவர்களுக்காக நான் தான் ஜபித்துக்கொண்டிருக்கிறேன்" என்பார்!

இதுபோன்றுதான் குருநாதர்கள் பல்வேறு சமயங்களில் பலருக்கு தீட்ஷை கொடுத்தும் கூட அதை சரியாக உபயோகிக்க தெரியாமல் பலர் அவதிப்படுகின்றனர்.

"ஓம் நமோ நாராயணாய", "ஓம் நம: சிவாய", "ஓம் சரவண பவ", "ஓம் நமோ பகவதே வாசுதேவாய" "ராம ராம" என்று பல மந்திரங்களும் பலர் அறிய இருக்கத்தான் செய்கின்றன. உங்களுக்கென சரியான குரு கிட்டும் வரை உங்களுக்குப் பிரியமான இஷ்ட தெய்வத்தின் (மேற்சொன்ன மந்திரங்களிலிருந்து) நீங்கள் ஜபிக்கலாம்தான்.

குரு மூலமாகப் பெறப்படும் மந்திர தீட்சை வீரியம் மிகக் கொண்டது. குரு உங்களுக்கேற்ற ஆன்மீகப் பாதை (பக்தி/ ஞானம்/ யோகம்) எது, உங்கள் பூர்வ ஜன்ம வாசனைகளுக்கேற்ற சரியான இஷ்ட தெய்வம் யார், அதற்கேற்ற சரியான மந்திரம் எது போன்றவற்றை அறிவார்;

உதாரணமாக, நீங்கள் ஏற்கனவே ராம பக்தராக இருந்து ராம நாமத்தை ஜபித்துவந்தவராக இருக்கலாம்; ஆனால் குரு அதனை சற்றே மாற்றி உங்களுக்கு நாராயண மந்திரத்தில் தீட்சை கொடுக்கக் கூடும். அதேபோல, ஒரு சிவ பக்தரை, தேவி உபாசகராக மாற்றவும் கூடும். குரு காட்டும் வழியை முரண்டு பிடிக்காது ஏற்கும் சரணாகதி அவசியம்.

மேலும், சத்குரு வெறும் மந்திரத்தை மட்டும் தருவதில்லை.

"ஒரு குரு மந்திர தீட்சை அளிக்கும்போது, தனது பிராணசக்தியின் ஒரு சிறு அம்சத்தை சீடனுக்கு அளிக்கிறார்; அது, பாலை உறைகுத்துவதற்கு சிறிது மோரைச் சேர்ப்பது போல. உறை குத்திய பால், விரைவில் தயிராகிறது. தான் பெற்ற மந்திரதை சிரத்தையுடன் ஜபிப்பது, அந்தத் தயிரைக் கடைவதைப் போல; தயிரைக் கடைந்து வெண்ணை எடுப்பது போல ஜபத்தின் வழியே தன் இஷ்ட தெய்வத்தை அடைய முடியும்"

பெரும்பாலும் மந்திர தீட்சை என்பது, பக்தி மார்க்கத்தில் தான் கூடுதல் உண்டு. சத்குருமார்களும், பரம ஞானியரும் வேறு விதங்களிலும் தமது அருளைச் அடியவர்க்களிப்பதுண்டு:

### நயன தீட்சை:

தன் கண் பார்வையினாலேயே பக்தனுக்கு தீட்சை அளிப்பது. பகவான் ரமண மகரிஷியின் அருள் அவ்வாறே அடியார்களுக்குக் கிட்டியது.

### ஸ்பரிச தீட்சை:

தொடுவதன் மூலம் தீட்சை அளிப்பது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் பெரும்பாலும் அப்படித்தான் அருளினார். அவர் இளைஞன் நரேந்திரனின் மார்பில் தொட்டவுடன் அவனுக்குப் புற உலகம் மறைந்து, அகக் காட்சி கிடைத்தது. அவரே பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர்.



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

### சொப்பன தீட்சை:

கனவில் வந்து காட்சி தருவதன் மூலம் தீட்சை. (பகவான் ரமணர் போன்ற) சில மகான்கள், கடல் கடந்து கூட உள்ள சில அன்பர்களுக்கு (அவர்கள் முன்பின் அம் மகானைப் பற்றி அறியாதவர்களாகவும் இருக்கக் கூடும்) கனவில் வந்து காட்சி தந்து, அவர்களுக்குள் ஆன்மீக விழிப்பை ஏற்படுத்தியது உண்டு. இது நிகழ்ந்து பல வருடங்களுக்குப் பின்னரே அவர்கள் அம் மகானைப் பற்றி அறிய வந்து நேரில் தரிசிக்க வரக்கூடும்.

குருவருள் தீட்சை வழி வந்தாலும், சீடனின் முயற்சியும் முக்கியமே. தீட்சை என்பது ஒரு வீரியம் மிக்க விதை போல எனலாம். விதையை சரியான நிலத்தில் பயிரிட்டு, நீர் வார்த்து, வளமிட்டு, அன்றாடம் கவனித்து, ஆடுமாடுகள் மேய்ந்து போகாமல் வேலியிட்டு, களையெடுத்துப் பராமரித்தால் விளைச்சல் கிட்டுவது போல, சிரத்தை,பக்தி, விசுவாசத்துடன் தொடர்ந்து மந்திர ஜபம் செய்யும்போது அதற்கான பலனும் கிட்டும். குருவருள் எப்போதும் துணை நிற்கும். குருவும் இறைவனும் வேறு வேறு அல்ல.

தற்போது தீட்ஷை என்பதை பெரும்பாலானவர்கள் அறிவதில்லை, பெரும்பாலான குருநாதர்கள் தீட்ஷை அளிப்பது இல்லை, அவ்வாறு ஒருசில அளித்தாலும் ஒருவித கட்டணம் நிர்ணயித்து வழங்குவதால் பலர் அதை விரும்புவதில்லை, தற்போது விழுப்புரம் மாவட்டம், கடகனூர் என்னும் இடத்தில் ராமானந்த குருஜி என்பவர், தனது குருஜி ஆஸ்ரமம் மூலம் நாராயண தீட்சையை எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக அளித்துவருகிறார்.

இவரின் இந்த ஆன்மிக சேவையைப் பற்றி 30-31-ஆம் பக்கத்தில் விரிவாக கொடுத்துள்ளோம் ஆன்மிகமலர் வாசகர் தேவையிருப்பின் பயன்படுத் திக் கொள்ளலாம்.

– கீதா–ராஜன்

❖ உடல் ஆரோக்கியம் ❖ குடும்பத்தில் சந்தோசம் ❖ மன நிம்மதி
❖ ஆன்மிக முன்னேற்றம் ❖ தெய்வீக ஆற்றல் தரும் தீட்சை

## கட்டணமின்றி குருஜியால் வழங்கப்படும்

# நாராயண தீட்சையின் மகத்துவங்கள்

உலகத்தையும் உலகத்து உயிர்களையும் காத்து ரட்சிப்பவன் எம்பெருமான் ஸ்ரீ நாராயண மூர்த்தி அவனது திவ்விய மங்கள நாமமான நாராயணா என்ற திருப்பெயர் சகலவிதமான சங்கடங்களை அகற்றி இன்பத்தை தரவல்லது

அந்த திருநாமத்தின் அகப்புரமாக மறைந்திருக்கும் மந்திர பீஜங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி மனிதர்களின் ஆற்றல்களை வளர்க்க வல்லது அதில் யாருக்கு எந்த மந்திர பீஜம் ஆற்றலை அளிக்கும் என்பதை ஆழ்ந்து அறிந்து பகுத்து தருவதே ஸ்ரீ நாராயண தீட்சை அடிப்படை தத்துவமாகும்.

நாராயணர் எப்படி உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானவனோ அதே போன்றே அவனது பீஜ மந்திரங்களும் பொதுவானதாகும் ஆண் பெண் பேதமின்றி ஜாதி மத வித்தியாசமின்றி வயது வரம்பு கூட தடையின்றி மனிதனாக பிறந்த அனைவரும் அம்மந்திரங்களை ஜெபிக்கலாம்.

குடும்பத்திலும், மனதளவிலும் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டவர்கள் இந்த நாராயண தீட்சை பெற்று உரிய பீஜ மந்திரத்தை ஜெபித்து வந்தால், விரைவில் நல்ல பலனை நேரிடையாக பெறலாம்.

இந்த நாராயணதீட்சையில் பெறப்படும் மந்திரத்தால் ஏற்படும் பலன்கள்

❖ உடல் ஆரோக்கியம்
❖ குடும்பத்தில் சந்தோசம்
❖ ஆன்மீகத்தில் முன்னேற்றம்
❖ மன நிம்மதி ஏற்படுத்தும்
❖ தெய்வீக ஆற்றல் பெருகும்





ஸ்ரீ நாராயண தீட்சையில் பெறக்கூடிய நாராயண மந்திரம் பொதுவானது கிடையாது ஒவ்வொருவருக்கும் மாறுபடும் உங்கள் ஜாதகத்தை வைத்தே உங்களுக்கான தனிப்பட்ட நாராயணா மந்திரத்தை குருஜியால் அளிக்கப்படும்.

இந்த மந்திரங்களை பெறுவதற்கு எந்த வித கட்டணமும் வசூலிப்பதில்லை. குருவிடம் இருந்து கற்றுக் கொள்ளும் ஒவ்வொரு வித்தைக்கும் ஏதாவது ஒரு காணிக்கை அளித்தால்தான் அதன் முழு பலனையும் பெற முடியும் என்று சாஸ்த்திர ரீதியாக கூறப்பட்டுள்ளதால், இந்த நராயண தீட்சை பெறுபவர்கள் தங்களால் இயன்ற ஒரு தொகையை காணிக்கையாக அளித்து, பீஜ மந்திரத்தை பெறலாம்.




ஒருருபாய் கூட காணிக்கையாக அளிக்கலாம். வசதி வாய்ப்பு உள்ளவர்கள் தங்கள் வசதிக்கேற்ப அளிக்கலாம். இதுதான் கட்டணம், இவ்வளவு கட்டணம் செலுத்தினால்தான் தீட்சைக்குரிய பீஜ மந்திரம் வழங்கப்படும் என்ற எந்த நிபந்தனையும் கிடையாது.

ஸ்ரீ நாராயண தீட்சை பெறுபவர்கள் அளிக்கும் தொகையை கிராமப்புறங்களில் உள்ள பெருமாள் கோவில்களுக்கு தொடர்ந்து விளக்கு ஏற்றுவதற்கு எண்ணைய், திரி போன்ற அவசியத் தேவையான கைங்கரிய சேவைக்கு கொடுக்கப்படும்.

நாராயண தீட்சை பெறுபவர்களுக்கு எந்த பாகுபாடும் கிடையாது, எந்த ஜாதி, மதத்தைச் சேர்ந்தவர்களும் பெற்றுக் கொள்ளலாம்.

நாராயண தீட்சை பெறுபவர்கள்,
உங்கள் முழு உருவ புகைப்படம்
பிறந்த தேதி, நேரம், அல்லது ஜாதக நகல்
உங்கள் பெயர், தந்தை பெயர்,
தாத்தா பெயர் (தந்தையின் தந்தை)

ஆகியவை அவசியம். ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே அனுப்பி வைக்கவும். அதே குடும்பத்தில் மீண்டும் ஒருவர் பெற விரும்பினால் 48 நாட்கள் அதாவது ஒரு மண்டலம் கழித்தே குருஜியிடம் மந்திரம் பெற இயலும்.

தொடர்ந்து குடும்பத்தில் பிரச்சனைகளை சந்திப்பவர்களும், தொழிலில் குறைபாடு உள்ளவர்களும், மனதளவில் பிரச்சனைகளை அனுபவிப்பவர்களுக்கும் இந்த தீட்சை அரு மருந்தாக இருக்கும்.

தற்போது இந்த தீட்சையை குருஜியிடம் நேரில் பெறும் வாய்ப்புள்ளவர் நேரில் வழங்கப்படும், வாய்ப்பு இல்லாதவர்கள் Online மூலமாக உங்களுக்கான நாராயண மந்திரத்தை பெறலாம்.



நாராயண தீட்சை பெறுபவர்கள் மிக கடினமான பூஜா விதிகளை கடைபிடிக்கவேண்டிய அவசியம் கிடையாது. இந்த மந்திர தீட்சை பெறும்போது எளிமையான சில வழிமுறைகள் எடுத்துரைக்கப்படும்.

இந்த நாராயண தீட்சை பெறுவதற்கு எந்தவித வயது கட்டுப்பாடும் கிடையாது ஏழு வயது முதற்கொண்டு அனைவருக்கும் நாராயண தீட்சை வழங்கப்படும்.

இந்த நாராயண தீட்சையை உலகின் எந்த மூலையில் இருப்பவர்களும் எளிதாக பெறமுடியும். ஆண், பெண், திருமணமாகாதவர், திருமணமானவர் என்ற எந்த பாகுபாடும் கிடையாது.

குருஜியின் நாராயண தீட்சையை பெற விரும்புவர்களும், இந்த தீட்சை குறித்து மேலும் விபரங்களை தெரிந்து கொள்ள விரும்புபவர்களும், உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருப்பவர்கள் **8110088855** இந்த தொடர்பு கொள்ளவும் (தொடர்பு எண் வாட்சப் எண்).


ஆன்மிகமலர் மெயில் புக்

# விநாயகர் விஸர்ஜனம்

புனர்பூஜை செய்த பிறகு மூர்த்தியை நீர்நிலையில் விஸர்ஜனம் செய்கின்றனர். விஸர்ஜனத்திற்காக செல்லும்போது, கணபதி மூர்த்தியோடு தயிர், அவல், தேங்காய் மற்றும் மோதகத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும். நீர்நிலைக்கருகில் மூர்த்திக்கு ஆரத்தி எடுத்து, மற்ற பொருட்களுடன் சேர்ந்து மூர்த்தியை விஸர்ஜனம் செய்ய வேண்டும். விஸர்ஜனத்தின்போது அந்த நீர்நிலையின் மண்ணை சிறிது எடுத்து வந்து வீட்டில் தெளிப்பது வழக்கம்.

புனர்பூஜைக்குப் பின் அன்றோ அல்லது மறுநாளோ மூர்த்தியை விஸர்ஜனம் செய்வது எல்லா விதங்களிலும் மிகவும் சிறந்தது

கணபதி விஸர்ஜன சந்தர்ப்பத்தில் மஹத்துவம் நிறைந்த விஷயம் என்னவென்றால் களிமண்ணால் செய்யப்பட்ட மூர்த்தியில் ப்ராணப்ரதிஷ்டை செய்த பின் ஒரு நாளைக்கு மேல் அதில் தெய்வத்தன்மையை வைத்திருக்க முடியாது. இதன் அர்த்தம் என்னவென்றால் கணேச மூர்த்தியை எப்பொழுது விஸர்ஜனம் செய்தாலும் கணேசமூர்த்தியில் ஆவாஹனம் செய்யப்பட்ட தெய்வீகத் தன்மை மறுநாளே மறைந்து போகிறது. அதனால் எந்த ஒரு தெய்வத்தின் புனர்பூஜை ஆன பிறகு அன்றோ அல்லது மறுநாளோ விஸர் ஜனம் செய்வது மிகவும் சிறந்தது. பிறப்புஇறப்பு சடங்குகளால் தீட்டு ஏற்பட்டிருந்தால் புரோஹிதர் மூலமாக கணேச விரதத்தை அனுஷ்டிப்பது சிறந்தது. வீட்டில் பிரசவதீட்டு போன்றவற்றிற்காக காத்திராமல் உரிய நேரத்தில் விஸர்ஜனம் செய்வது சிறந்தது.

## மூர்த்தியில் உண்டான தெய்வீகத் தன்மையால் மூர்த்தியில் 21 நாட்களுக்கு சைதன்யம் நிறைந்து காணப்படுகிறது

மூர்த்தியில் ஒரு நாளைக்கு மேல் தெய்வீகத் தன்மை இருப்பதில்லை என்று மேலே கூறப்பட்டுள்ளது. எல்லோர் மனங்களிலும் எழும் கேள்வி என்னவென்றால், ப்ராணப்ரதிஷ்டை ஆன கணேசமூர்த்தியில் ஒரு நாளைக்கு மேல் தெய்வீகத் தன்மை இருப்பதில்லை என்றால் கணேச உற்சவங்களில் ஒரு நாளைக்கு மேல் பூஜிக்கப்படும் கணேச மூர்த்திகளின் உபாஸனையால் பக்தர்களுக்கு என்ன பயன் கிட்டப் போகின்றது? இதற்கான விடை, மூர்த்தியிலுள்ள தெய்வீகத் தன்மை மறைந்து போனாலும் அந்த தெய்வ சைதன்யத்தின் ப்ரபாவம் மூர்த்தியில் 21 நாட்களுக்கு நிறைந்துள்ளது என்பதுதான். அதோடு கணேஷோத்ஸவ காலங்களில் அன்றாடம் நடைபெறும் பூஜை அர்ச்சனைகளால் பூஜிப்பவரின் பக்தி பாவத்திற்கு ஏற்றபடி மூர்த்தியிலும் சைதன்யம் அதிகரிக்கிறது. 21 நாட்களுக்குப் பிறகு மூர்த்தியிலுள்ள சைதன்யம் சிறிது சிறிதாக குறைய ஆரம்பிக்கிறது.

## மூர்த்தி மற்றும் பூஜை நிர்மால்யத்தை ஓடும் தண்ணீரில் விஸர்ஜனம் செய்வதன் சாஸ்திரம்

மூர்த்தியிலுள்ள பவித்ர துகள்களாலும் சைதன்யத்தாலும் மூர்த்தியை ஓடும் தண்ணீரில் விஸர்ஜனம் செய்யும்போது தண்ணீரும் பவித்ரமாகிறது. உபாஸனை விதிகளின் பலனாக கணபதியின் பவித்ரத்தன்மை நிறைந்து காணப்படும் மூர்த்தியை தண்ணீரில் கரைக்கும்போது அந்த தண்ணீருக்கும் பவித்ரத்தன்மை ஏற்படுகிறது. ஓடும் தண்ணீர் பலரை சென்றடைவதால் பலருக்கு இதன் பலன் கிடைக்கிறது. இந்த தண்ணீரின் பவித்ரத் தன்மையால் சுற்றுப்புற சூழ்நிலையும் ஸாத்வீகமானதாக மாறுகிறது.

பூஜைக்கு பயன்படும் பொருட்களும் சைதன்யம் நிறைந்து காணப்படுகிறது. அதனால் அவற்றையும் ஓடும் தண்ணீரில் விஸர்ஜனம் செய்ய வேண்டும். இந்த நிர்மால்யப் பொருட்களில் பூக்கள், இலைகள் போன்ற இயற்கைப் பொருட்களே உள்ளன. அதனால் அவற்றால் நீர் மாசு ஏற்படுகிறது என்ற பேச்சுக்கே இடமில்லை. இதற்கு மாறாக, ரசாயனக் கழிவுகளாலேயே நீர் மாசு ஏற்படுகிறது.

## விஸர்ஜனத்தை ஏன் செயற்கையான நீர்த் தொட்டியில் செய்யக் கூடாது?

மாசில்லாத கணேசமூர்த்தி விஸர்ஜனம் என்ற பெயரில் சில மாநகராட்சிகளும் அல்லது உள்ளூர் அரசு நிர்வாகங்களும் பல இடங் களில் செயற்கையான நீர்த் தொட்டிகளை ஏற்படுத்துகின்றனர். ஆனால் இத்தொட்டிகளில் விஸர்ஜனம் செய்வது நல்லது அல்ல. ஏனென்றால்

அ. தர்மசாஸ்திரப்படி கணேசமூர்த்தியை ஓடும் தண்ணீரிலேயே விஸர்ஜனம் செய்ய வேண்டும். ஓடும் நீரில் மூர்த்தியை விஸர்ஜனம் செய்வதால் மூர்த்தியிலுள்ள சைதன்யம் தண்ணீரின் வாயிலாக எல்லா இடங்களுக்கும் செல்ல முடிகிறது. அதனால் பலருக்கு நன்மை உண்டாகிறது. செயற்கை குளத்தில் ஓடும் நீர் இல்லாததால், பக்தர்களுக்கு இந்த நன்மை கிடைப்பதில்லை.

ஆ. நீர்த் தொட்டியில் விஸர்ஜனம் செய்த பிறகு அதற்குரிய அதிகாரி அந்த மூர்த்தி முழுதும் கரைவதற்கு முன்னரே மூர்த்தியைத் தூக்கி வெளியே வைத்து விடுகிறார்.

இ. நீர்த் தொட்டியில் விஸர்ஜனம் செய்யப்பட்ட மூர்த்திகள் மாநகராட்சி குப்பை லாரிகளில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

ஈ. கணேசமூர்த்திகளின் விஸர்ஜனத்திற்குப் பிறகு அந்த நீர்த் தொட்டியின் தண்ணீர் முழுவதும் சாக்கடையில் சேர்க்கப்படுகின்றன. இதுவும் ஒரு வகையில் கணேச மூர்த்தியை அவமதிப்பதாகும்.

வறண்ட இடங்களிலும் ஆபத்துக் காலங்களிலும் கணேசமூர்த்தியை விஸர்ஜனம் செய்வதில் ஏற்படும் எதிர்ப்புகள் சில வருடங்கள் போதிய அளவு மழை பெய்யாத தால் நதிகளும் குளங்களும் வறண்டு போகின்றன. அதனால் தர்ம சாஸ்திரப்படி கணேசமூர்த்தியை ஓடும் நீரில் கரைப்பதற்கு தடைகள் ஏற்படுகின்றன. வறண்ட காலத்திலும் தார்மீக காரியங்களை ஆன்மீக தத்துவப்படி செய்வதால் தர்ம சாஸ்திரத்தின் பலன் கிடைக்கிறது. அதன்படி வறண்ட காலத்தில் கீழ்க்கண்ட முறைகளை பின்பற்றி கணேசமூர்த்தியின் விஸர்ஜனத்தை செய்யலாம்.

அ. ஒவ்வொரு முறையும் பெரிய அளவு மூர்த்தியை பூஜிக்கும் வழக்கம் இருந்தாலும் வறண்ட காலத்தில் சிறிய அளவு மூர்த்தியை (67 இஞ்ச் மூர்த்தி) வைத்து பூஜிக்கலாம்.

ஆ. புனர்பூஜையின் பின்பு மூர்த்தியை வீட்டிற்கு வெளியே கொண்டு வரவும். துளஸி பிருந்தாவனத்திற்கு அருகில் ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி அதில் மூர்த்தியை விஸர்ஜனம் செய்யவும். துளஸி பிருந்தாவனமோ, வெற்றிடமோ இல்லாத ஃப்ளாட்டுகளில் வீட்டினுள் பெரிய பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி அதில் மூர்த்தியை விஸர்ஜனம் செய்யலாம்.

இ. மூர்த்தி, தண்ணீரில் பூரணமாக கரைந்த பிறகு காலில் படாத இடமாக, அரசமரம், ஆலமரம், வில்வமரம் போன்ற ஸாத்வீக மரங்களின் அடியில் தண்ணீரைக் கொட்டவும்.

ஈ. சிறிய மூர்த்தி செய்ய முடியாமல் பெரிய அளவு மூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், புனர்பூஜைக்கு சிறிது நாட்களுக்குப் பின் விஸர்ஜனம் செய்யவும் : சிறிய அளவு மூர்த்தி செய்ய முடியாமல் பெரிய அளவு மூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அதை ஸ்தாபித்து புனர்பூஜை முடிந்த பின் வீட்டில் ஸாத்வீகமான (உதா. பூஜையறை அருகில்) இடத்தில் வைக்கவும். இந்த மூர்த்திக்கு நித்ய பூஜை செய்ய வேண்டிய அவசியமில்லை. அந்த மூர்த்தியின் மீது தூசி படியாவண்ணம் ஏதாவது பெட்டியில் பத்திரமாக எடுத்து வைக்கவும். பின்பு மழைக் காலத்தில் ஓடும் தண்ணீர் வசதி ஏற்படும்போது மூர்த்தியை ஓடும் தண்ணீரில் விஸர்ஜனம் செய்யவும்.

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626



# ராமதாசர் கொடுத்த காவி கொடி



சிவாஜி தன் ராஜ்ஜியத்தையே தன் குருவான ராமதாசருக்கு அர்பணிக்க தயாராயிருந்தான் ஆனால் குரு ஏற்கவில்லை. ஒரு சமயம் குரு ராமதாசர் வீதியில் பிக்ஷை எடுத்துக்கொண்டு வருவதை சிவாஜி அரண்மனையிலிருந்து பார்த்தார்.

உடனே தன் நண்பன் பாலஜியிடம் ஒரு பேப்பரில் ஏதோ எழுதி அதை குருவின் கமண்டலத்தில் போடச் சொன்னார்.

அவரும் அதை ராமதாஸரின் கமண்டலத்தில் இட்டார்.

அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா?

"சிவாஜி மகாராஜ் தன்னுடைய அகண்ட ராஜ்ஜியத்தை குருவிற்கு தானமாக கொடுத்துவிட்டதாக" இருந்தது.

குரு ராமதாஸரும் சரி என்று சொல்லிவிட்டு "சிவாஜி இப்போது மன்னன் இல்லை என்னுடன் பிக்ஷை எடுக்க வரச்சொல்" என்றார்.

சிவாஜியும் ராஜ உடையை களைந்து விட்டு குருவுடன் கமண்டலத்தை ஏந்திக்கொண்டு பிக்ஷை எடுத்தார்.

மக்கள் மேலும் என்ன செய்வதாக உத்தேசம் என்றார்.

குரு சிரித்துக்கொண்டே சொன்னார் "இனி நான் சொல்லும் வேலை யைத்தான் செய்ய வேண்டும்" என்றார்.

சிவாஜியும் "அப்படியே ஆகட்டும் குருவே" என்றார்.

ராமதாஸர் உடனே சிவாஜியிடம் "இந்த அகண்ட ராஜ்யத்தை மக்களின் பிரநிதியாக இருந்த ஆட்சிபுரிவாயாக" என்றார்.

இப்படி கூறிவிட்டு தன்னுடைய காவி வஸ்த்திரத்திலிருந்து ஒரு பகுதியை கிழித்து கொடுத்து, "இதையே உனது கொடியாகக் கொண்டு பரிபாலனம் செய்" என்று ஆசி வழங்கினார்.

சிவாஜியும் குரு கூறியபடியே அதைக் கொடி யாகக்கொண்டு மிகப் பெரிய ராஜ்ஜியத்தை உருவாக்கினான்.

## ‘ஜன்ஜூட்’ எனும் இராகம்

வீர சிவாஜியைப் பார்ப்பதற்காக சமர்த்த இராமதாசர் அரண்மனைக்கு வந்தார். அந்த நேரத்தில் சமர்த்த இராமதாசரின் தலைமைச் சீடரான உத்தமர் என்பவர் அரண்மனை நந்தவனத்தில் இருந்த பழங்களைப் பறிப்பதற்காக சமர்த்த இராமதாசரிடம் அனுமதி கேட்டார்.

அதற்கு..

“நானே பறித்துத் தருகிறேன்” என்று சொல்லி கீழே கிடந்த கல்லை எடுத்துக் கனிகளின் மீது வீசினார் சமர்த்த இராமதாசர். அந்தக் கல் தவறுதலாக ஒரு பறவை மீது பட்டு பறவை துடிதுடித்துக் கீழே விழுந்து இறந்தது.

அதைப் பார்த்து அங்கிருந்தவர்கள், “இவர் பெரிய ஞானிதாம். ஆனால் கல்லை எடுத்து அடித்துப் பறவையைப் பரலோகம் அனுப்பிவிட்டாரே!” என்று பரவலாகப் பேசினார்கள்.

அதைக்கேட்ட சமர்த்த இராமதாசர் இராம மந்திரத்தின் மகிமையை விளக்கும் ஒரு பாடலை ‘ஜன்ஜூட்’ எனும் இராகத்தில் பாடினார்.

பாடலைப் பாடிய படியே கீழே இறந்து கிடந்த பறவையை எடுத்து ஆகாயத்தில் வீசினார்.

அந்தப் பறவை உயிர் பெற்று அப்படியே பறந்து ஓடியது.. ஹிந்துஸ்தானி இராகமான ‘ஜன்ஜூட்’ என்ற இராகத்தைப் பாடினால் எப்படிப்பட்ட நோயும் நீங்கும் என்பது இன்றும் நிலவி வரும் நம்பிக்கை.

கர்னாடக சங்கீதத்தில் அதே சாயலுடைய ‘செஞ் சுருட்டி’ என்ற இராகம், பக்தி பாவத்துடன் பாடப்படுமானால் மனோ ரோகங்களைப் போக்க வல்லதாக இருக்கிறது.

சமர்த்த இராமதாசர் இறந்துபோன பறவையை உயிருடன் எழுப்பிய தகவல் ஊரெங்கும் பரவியது.

அப்போது மாவுலி நகரத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த முகலாய மன்னனுக்கும் தகவல் தெரிந்தது. அவன் மனைவிக்கு சித்தப் பிரமை உண்டாகியிருந்தது. அந்த முகலாய மன்னன் மாவுலி நகர ஹிந்துக்கள் அனைவரையும் இஸ்லாம் மதத்தைச் சேரும்படி கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தான்.

அப்படிப்பட்ட அந்த மன்னன்தான் சமர்த்த இராமதாசரைப் பணிந்து “என் மனைவியின் சித்தப் பிரமையைத் தீர்த்து வையுங்கள்!” என வேண்டினார்.

சமர்த்த இராமதாசரும் பார்த்தார். ‘இந்த மன்னனை நல்வழிப்படுத்த இஃது ஒரு நல்ல வாய்ப்பு' என்று எண்ணிய அவர் மன்னனின் மனைவி முன்னால் மூன்று மணிநேரம் ‘மால் கவுஞ்ச்’ என்ற இராகத்தில் இராம பஜனை செய்தார்.

மூன்றாவது மணியில் மன்னனின் மனைவி சித்தப் பிரமை நீங்கித் தெளிந்து எழுந்தாள். அவளையும் தன்னுடன் சேர்ந்து பாடச் செய்தார் சமர்த்த இராமதாசர். முகலாய மன்னன் வெட்கித் தலைகுனிந்தான்.

ஹிந்துக்களுக்குத் தான் இழைத்த அநீதிக்கு ஏதாவது பரிகாரம் செய்ய எண்ணி சமர்த்த இராமதாசரிடம் முறையிட்டான்.

இராமதாசர், “மக்கள் ஒருவரை ஒருவர்சந்தித்துக் கொள்ளும்போது ‘ராம் ராம்!” என்று சொல்லிக்



எஸ்.ரகுராமன்

## சமர்த்த ராமதாசர் வரலாறு (பாகம்-4)



கொள்ள வேண்டும்” எனக் கேட்டார்.

அன்று முதல் மஹாராஷ்டிர மாநிலம், மாவுலி நகரம் முதலான வட தேசங்களில் மக்கள் ஒருவருக்கொருவர் ‘ராம்! ராம்!’ எனச் சொல்லிக் கொண்டார்கள். மஹா ஞானியான சமர்த்த ராமதாசரின் நல்லிசையால் அவர் பெற்ற இராம பக்தியால் நம்தேசத்தில் ஒரு ஹிந்து சாம்ராஜ்ஜியமே நிறுவப்பட்டது.

வெங்கோஜி

சத்ரபதி சிவாஜி தன் குருவான சமர்த்த ராமதாசரிடம் சென்று தஞ்சையை ஆட்சி செய்த தன் சகோதரன் வெங்கோஜிக்கு அருள் செய்ய வேண்டினார். அதன்படி கி.பி.1677இல் சமர்த்த ராமதாசர் ராமேஸ்வரத்திற்கு தலப்பயணம் சென்றபோது மன்னார்குடியில் தங்கினார்.

அதனை அறிந்த வெங்கோஜி மன்னர் அவரை நேரில் சென்று பார்த்து தஞ்சைக்கு வந்து தங்கி அருளாசி வழங்க வேண்டினார்.

மன்னரின் வேண்டுகோளை ஏற்று அவர் தஞ்சாவூருக்கு வந்தார். வெங்கோஜி மன்னர் அவருக்கு தஞ்சையின் கிழக்கே அமைந்துள்ள சாமந்தான் குளத்தின் கீழ்க்கரையில் அவருக்கு இடம் அமைத்து தகுந்த மரியாதைகளைச் செய்து தனக்கு அருள் வழங்க வேண்டினார். அவரும் அருள் செய்து ஆன்மீகத்தை மன்னருக்கு போதித்தார். சில நாள்கள் அவர் தஞ்சாவூரில் தங்கினார். பின்னர் ராமேஸ்வரம் சென்றார்.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593





# மனக்கஷ்டம் பணக்கஷ்டம் போக்கும் வெற்றிலை தீர்த்தம்

வீட்டில் தொடர்ந்து ஏதாவது பிரச்சனை இருந்து கொண்டே இருந்தால் ஒருசில தாந்திரிக பரிகாரங்கள் மூலம் இந்தப் பிரச்சனையை எளிதாக தீர்க்க முடியும்.

அந்தவகையில் எளிதாக பிரச்சனையை தீர்க்கும் ஒரு செயல் முறையைப் பார்ப்போம். இந்த முறையை பயன்படுத்தினால் எந்த கெட்ட சக்தியும் வீட்டை அனுகாது.

வீட்டில் பூஜை அறையில் கடவுளை வணங்கும் போது, அவசியம் வெற்றிலையை பயன்படுத்த வேண்டும். வெற்றிலை வைத்து வணங்கும் போது பல நன்மைகள் உண்டாகிறது என சாஸ்திரங்கள் சொல்கின்றன.

இதில் வெற்றிலை தீர்த்தம் மிகப்பெரிய பலனை தரும். வெற்றிலை தீர்த்தத்தை தயாரிக்கும் முறையை பற்றி பார்ப்போம்.

வெற்றிலையோடு நன்னாரிவேர் 2 துண்டு, ஒரு சிட்டிகை மஞ்சள் தூள், பச்சைகற்பூரம் ஒரு சிறிய துண்டு, ஜவ்வாது தூள் ஒரு சிட்டிகை, இவை அனைத்தையும் சேர்த்து, வீட்டில் பித்தளை அல்லது செம்பு பாத்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுத்தமான நீரை ஊற்றி அதில் மேற்குறிப்பிட்ட பொருட்களை எல்லாம் போட்டு விடவேண்டும். நறுமணம் மிக்க இந்த தண்ணீருக்குள், வெற்றிலைக்காம்பு மேல் பக்கத்தில் இருக்கும் படி, வெற்றிலை ஒன்றை தண்ணீரில் மூழ்க வைத்து விடுங்கள்.

இதை எப்போது செய்ய வேண்டும்? வெள்ளிக்கிழமை காலை மகாலட்சுமி பூஜை செய்யும்போது இந்த சொம்பை தயார் செய்து, மகாலட்சுமி தாயாரின் முன்பு வைத்து, பூஜை செய்ய வேண்டும்.



மாலை பூஜை அறையில் தீபம் ஏற்றி வைத்து விட்டு, அந்த சொம்பில் இருக்கும் தீர்த்தத்தை எடுத்து, அந்த வெற்றியினால் உங்கள் வீட்டு மூலைமுடுக்குகளில் தெளித்து விட வேண்டும்.

சமையலறை, படுக்கையறை வரவேற்பறை இப்படி உங்கள் வீட்டில் எவ்வளவு அறைகள் இருக்கின்றதோ! அந்த அறைகள் முழுவதிலும் இந்த தண்ணீர் படும் அளவிற்கு தெளித்து விட்டீர்கள் என்றால், மூதேவி உங்கள் வீட்டில் வாசம் செய்யவே மாட்டாள்.

நறுமணமிக்க இந்த தீர்த்த மானது வீட்டில் சந்தோஷத்தை நிலையாக வைத்திருக்கும். பணக்கஷ்டம் ஏற்படாது. மனக் கஷ்டம் ஏற்படாது. சண்டை சச்சரவு ஏற்படாது. நோய் நொடிகள் இல்லாத வளமான வாழ்க்கையை வாழ்வதற்கு இது ஒரு சிறந்த முறையாகும்.

இந்த நீரில் கலக்கப்படும் பொருட்களுக்கு தீய சக்திகளையும், துர் எண்ணங்களையும் அழிக்கும் ஆற்றல் அதிகம் இருக்கிறது. இதன்கூட மகாலட்சுமிக்கு உகந்த வெற்றிலை சேரும்போது வீட்டில் லட்சுமி கடாட்சம் நிறைந்து காணப்படும்.

புதிய தொழில் துவங்கும்போதும், தொழில், வியாபாரம் நடைபெறும் இடங்களில் இந்த நீரை தெளித்து லட்சுமி பூஜை செய்தால் மிகுந்த லாபம் கிடைக்கு, தொழில் மற்றும் வியாபாரம் வெற்றிகரமாக நடைபெறும்.

– ஷ்யாம், சென்னை.



• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மீகமலர்.காம்

# அரசியல் லாபத்திற்காக கலப்படம் செய்யப்பட்ட ரகுபதி ராகவ ராஜா ராம் பாடல்



## கலப்படப் பாடல்

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்

ஈஸ்வர் அல்லா தேரோநாம்
சப்கோ சன்மதி தே பகவான்
ஈஸ்வர் அல்லா தேரோநாம்
சப்கோ சன்மதி தே பகவான்
ஈஸ்வர் அல்லா தேரோநாம்
சப்கோ சன்மதி தே பகவான்

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்
ஈஸ்வர் அல்லா தேரோநாம்
சப்கோ சன்மதி தே பகவான்
ஈஸ்வர் அல்லா தேரோநாம்
சப்கோ சன்மதி தே பகவான்

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்

## உண்மையான பாடல்

ரகுபதி ராகவ் ராஜரம்
பதீதா பாவனா சித்தாரம்

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்

சுந்தர் விக்ரஹ மேகாஷ்யம்
கங்கா துளசி ஷாலிகிராம்
பத்ரா கிரிஷ்வர் சித்தாரம்
பக்த ஜன பிரிய சித்தாரம்
ஜானகி ரமண சித்தாரம்
ஜெய ஜெய ராகவா சித்தாரம்

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்

சுந்தர் விக்ரஹ மேகாஷ்யம்
கங்கா துளசி ஷாலிகிராம்
பத்ரா கிரிஷ்வர் சித்தாரம்
பக்த ஜன பிரிய சித்தாரம்
ஜானகி ரமண சித்தாரம்
ஜெய ஜெய ராகவா சித்தாரம்

– ஸ்ரீலமகனாச்சார்யா

## உண்மையான பாடல்

Ragupathi Raghav rajaram
Patheetha paavana sitaram

Ragupathi Raghav rajaram
Patheetha paavana sitaram

Sundar vigraha meghashyam
Ganga Thulasi shaalighram
Bhadhra gireeshwar sitaram
Bhakta Jana priya sitaram
Jaanaki ramana sitaram
Jaya jaya Raghava sitaram

Ragupathi Raghav rajaram
Patheetha paavana sitaram

## உண்மையான பாடல்

रघुपति राघव राजाराम

पतित पावन सीताराम

सुंदर विग्रह मेघाश्याम

गंगा तुलसी शालीग्राम

भद्रगिरीश्वर सीताराम

भगत-जनप्रिय सीताराम

जानकीरमणा सीताराम

जयजय राघव सीताराम

இந்து சமயத்தில் உள்ள பல சரித்திரங்கள், இதிகாசங்களில், திட்டமிடப்பட்டு பல கலப்படங்கள் நிகழ்த்தப்பட்டு உள்ளது.

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதீத பாவன சீதாராம்

இந்த பாடலை பண்டிட் லக்ஷ்மநாச்சார்யா (ஸ்ரீலமகனாச்சார்யா) எழுதியுள்ளார்.

இந்த பாடல் முழுக்க ராமாயணத்தை படித்து அதனால் ஈர்க்கப்பட்ட ஒரு அதீத ஆனந்தத்தில் பண்டிட் அவர்கள் எழுதினார்.

இந்தப் பாடல் உச்சரிப்பும் பாடல்வரிகளும் மனதிற்கு கேட்க கேட்க இன்பமயமாக இருக்கும். ஆனால், இதிலும் ஒரு கலப்படத்தை நமது அரசியல் ஆதாயத்திற்கு இணைக்கப்பட்டு பாடுவது மிகவும் கொடுமையிலும் கொடுமையான விஷயமாகும்.

உண்மையில் இந்த பாடல் பாடப்பட்ட நோக்கத்தை சிதைக்கும் வகையிலும், கலாச்சாரத்தை சீரழிக்கும் விதமாக ராமனுக்கு உகந்த பாடல் சிதைக்கப்பட்டு தற்போது போலியான பாடல் பாடப்பட்டு வருகிறது.

பல்வேறு காலகட்டங்களில் இந்து மத புராணங்கள், இதிகாசங்களில் பல்வேறு இடைச்செருகல்கள் புகுத்தப்பட்டுள்ளது என்பதற்கு இந்த ஒரு பாடலே சாட்சி.

உண்மையான பாடல் பச்சை வண்ணத்திலும், போலியாக பாடப்படும் பாடல் சிகப்பு வண்ணத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது.

போலியான பாடலில் "ஈஸ்வர் அல்லா தேரோ நாம்" என்ற சொற்றொடரைச் சேர்த்து இசைக்கப்படுகிறது.

இதுபோன்றுதான் கால்டுவெல் போன்ற கிறிஸ்த்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்து மதத்தை சிதைக்கவேண்டிய குறிக்கோளுடன், இந்து புராணங்களை திரித்தும், சிதைத்தும் மக்களிடம் பரப்பினர், இதற்கு ஒருசில இந்திய தலைவர்களும் தனது அரசியல் ஆதாயத்திற்கு பரப்பி மக்களை முட்டாளாக்கினார்கள்.

இந்த வகையில்தான் மனு தர்மமும் சிதைக்கப்பட்டு, தொழில் ரீதியாக மக்களை பிரித்து பார்த்ததை, பிறப்பு ரீதியாக மாற்றி பிராமனன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்று ஒவ்வொருவருக்குள்ளும் கலகத்தை உருவாக்கி, இந்து மக்களிடையே பிளவை ஏற்படுத்தினார்கள்.

உண்மையில் இந்துக்கள் தங்களது புராணத்தை படிக்கவிடாமலும், வரலாற்றை படிக்கவிடாமலும், ஆங்கிலேய கல்வி கொள்கையை இந்தியாவில் புகுத்தி, அக்பர், கஜினி முகமது, கலிலியோ, அன்னை தெரசா போன்ற வந்தேரி சரக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து. நமது சமயம், கலாச்சாரத்தை சிதைத்துள்ளனர்.

இனியாவது நாம் விழித்துக்கொள்ளவில்லையென்றால், பாரம்பரியமிக்க நமது கலாச்சாரம் மறந்து, வெளிநாட்டு கலாச்சாரத்தை நம் பிள்ளைகள் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


ஆன்மிகமலர் மெயில் புக்




ஆச்சரியமான

# உண்மை....

சந்தா இல்லை

நன்கொடை பெறுவதில்லை

விளம்பரங்கம் வாங்குவதில்லை

ஆனாலும் வெற்றிகரமாக

# 100வது இதழை நோக்கி

உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,
தரத்திலும், வடிவமைப்பிலும் நம்பர் 1 ஆன்மிக
இ-புத்தகமாக வெளிவரும் ஒரே இதழ்

ஆன்மிகமலர்.காம் இணையதளம் மூலம் வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில்புத்தகம் மட்டுமே....

❖தனித்திருப்போம் ❖உலகை காப்போம் ❖கரோனாவை அழிப்போம்...